# வானவில்

VAANAVIL
ISSUE – 65 MAY 2016

இதழ் – 65 வைகாசி 2016


# இலங்கையின் புதிய அரசியல் அமைப்பு எப்படி இருக்கப்போகிறது?




இலங்கைக்கு புதிய அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற பேச்சுகள் 2015, ஜனவரி 08 இல் மைத்திரி – ரணில் அரசு உருவான நாளிலிருந்து பேசப்பட்டு வருகின்றது. ஆனால் இந்தப் புதிய அரசியல் அமைப்பு என்ன தேவைக்காகக் கொண்டு வரப்படுகிறது என்றோ, அது எப்படியானதாக அமையவிருக்கிறது என்றோ, அரசாங்கமும் சரி, எதிர்க்கட்சிகளும் சரி இதுவரை தெளிவுபடுத்தாத ஒரு நிலைதான் இருந்து வருகிறது. அதன் காரணமாக புதிய அரசியல் அமைப்பு சம்பந்தமாக 'யானை பார்த்த குருடர்கள்' நிலை ஒன்று நிலவுகின்றது.

சுதந்திர இலங்கைக்கு என இதுவரை மூன்று அரசியல் அமைப்புகள் வரையப்பட்டுள்ளன. முதலாவது அரசியல் அமைப்பு இலங்கை 1948இல் பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்ற பொழுது, பிரித்தானியரால் வரையப்பட்டு கையளிக்கப்பட்ட 'வெஸ்ற்மினிஸ்ரர்' முறையிலான சோல்பரி அரசியல் அமைப்பு.

'இந்த அரசியல் அமைப்பு பிரித்தானிய காலனித்துவவாதிகளின் நலன்களைப் பாதுகாப்பதற்காக வரையப்பட்டது, இலங்கையின் தேசிய நலன்களுக்கு எதிரானது' என்று சொல்லி, 1970இல் பதவிக்கு வந்த திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சிகளைக் கொண்ட கூட்டரசாங்கம், 1972இல் புதிய குடியரசு அரசியல் யாப்பொன்றை அறிமுகம் செய்தது.

இந்த அரசியல் அமைப்பில் பல நல்ல விடயங்கள் இருந்தபோதிலும், சோல்பரி அரசியல் அமைப்பில் சிறுபான்மை இனங்களுக்குப் பாதுகாப்பாக இருந்த 28ஆவது சரத்து நீக்கப்பட்டுள்ளது என்று சொல்லியே தமிழரசுக் கட்சி இதற்கு எதிராகச் சட்டவிரோதப் போராட்டங்களை ஆரம்பித்து பின்னர் அது தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டமாவதற்கு வழிவகுத்தது. ஆனால், சோல்பரி அரசியல் சட்டத்தாலும் தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்படவில்லை என்பதையோ, அது அமுலில் இருந்த காலத்தில்தான் தமிழரசுக் கட்சி சமஸ்டிக் கோரிக்கையை முன்வைத்தது என்பதையோ, தமிழ் தலைமைகள் ஒருபோதும் பேசுவதில்லை.

இதன் பின்னர், 1977இல் பதவிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம், குடியரசு அரசியல் யாப்பை நீக்கிவிட்டு 1978இல் மீண்டுமொரு புதிய அரசியல் யாப்பை அறிமுகம் செய்தது. இந்த அரசியல் யாப்பு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை அறிமுகம் செய்து தனிமனித சர்வாதிகாரத்துக்கு வழிவகுத்ததுடன், பாராளுமன்ற ஜனநாயகத்தையும் குழிதோண்டிப் புதைத்தது. மிகக் கடுமையான ஒற்றையாட்சி முறையைக் கொண்ட இந்த அரசியல் அமைப்பால்தான் இனப் பிரச்சினை யுத்தமாக வடிவெடுத்தது. இந்த நிமிடம் வரை இந்த அரசியல் அமைப்புத்தான் நடைமுறையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சூழ்நிலையில்தான் தற்போதைய


தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

# புதிய முன்னணி பத்தோடு பதினொன்றாக மாறிவிடக்கூடாது!

**'ஜனநாயக** தமிழ் தேசிய முன்னணி' என்ற சில தமிழ் கட்சிகளின் புதியதொரு அமைப்பு அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. முதுபெரும் அரசியல்வாதியும், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவருமான வீ.ஆனந்தசங்கரி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் முயற்சியால் இம்முன்னணி அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. முன்னணியில் நாடு முழவதும் உள்ள 10 தமிழ் பேசும் மக்களின் கட்சிகள் அங்கம் வகிக்கின்றன.

முன்னணியின் பெயரிலேயே இந்த முன்னணியின் நோக்கம் என்ன என்பது ஓரளவு தெளிவாகிறது. அதாவது, வெறும் தமிழ் தேசியம் பேசாது, ஜனநாயகத்துடனான தமிழ் தேசியம் நிலைநாட்டப்பட வேண்டும் என்பது தெளிவாகின்றது. இது ஒரு நல்ல அடியெடுப்புத்தான்.

ஏனெனில், 1947ஆம் ஆண்டு முதல் இன்று வரையான இந்த 69 வருட காலத்தில் தமிழ் மக்களுக்கு பிற்போக்கு – வலதுசாரி – இனவாத சக்திகளே தலைமைதாங்கி வந்துள்ளன. அவர்கள் தமிழ் மக்களின் தேசிய – ஜனநாயக நலன்களை விட, தமக்கு பாராளுமன்றப் பதவிகளைப் பெறுவதிலும். ஏகாதிபத்தியத்துக்கும் அதன் உள்நாட்டு அடிவருடியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சாமரம் வீசுவதிலுமே தமது காலத்தைக் கழித்து வந்துள்ளனர். அதனால் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரு தீர்வு வராமல் தள்ளிப் போய்க்கொண்டே இருக்கிறது.

இரு தரப்பிலும் இருக்கின்ற இனவாதிகள் தமது அரசியல் ஆதாயங்களுக்காக இனப் பிரச்சினையை யுத்தமாக மாற்றியதன் காரணமாக, தமிழ் பேசும் மக்கள் கொடுத்த விலை அளவுக்கு அதிகமானது. இருந்தும் தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு வராதது மட்டுமின்றி, திரும்பவும் ஒரு சுற்று அழிவு வேலைகளுக்கு இரு தரப்பும் தயாராகியும் வருகின்றன. 69 வருடங்களாக இருக்கும் பிற்போக்குத் தமிழ் தலைமையை வைத்துக்கொண்டு இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காண முடியாது என்பது வரலாற்றுப் படிப்பினையாக இருக்கின்றது. எனவே தலைமையிலும் கொள்கையிலும் ஒரு மாற்றம் அவசியம் தேவை.

இந்த நிலைமையில் புதிதாக உருவாகியிருக்கும் ஜனநாயக தமிழ் தேசிய முன்னணியின் உதயம் வரலாற்றுத் தேவையால் எழுந்த ஒரு நிகழ்வாகும். இந்தத் தேவை கடந்த பல ஆண்டுகளாகவே இருந்து வந்தது. அதற்கான முயற்சிகளும் பல்வேறு அமைப்புகளால் எடுக்கப்பட்டு வந்தது. இனப் பிரச்சினை ஆயுதப் போராட்டமாக மாறிய காலத்தில், அதில் பல தவறுகள் இருந்தாலும், பழைய பிற்போக்குத் தமிழ் தலைமைக்கு மாற்றாக இளைஞர்களின் ஓரளவு முற்போக்கான ஐக்கியத் தலைமை உருவாகக்கூடிய ஒரு நிலை இருந்தது. ஆனால் பழைய தமிழ் பிற்போக்கு சக்திகளும், ஏகாதிபத்திய சக்திகளும் அந்த நிலைமை உருவாகாதவாறு பாசிசப் புலிகள் மூலம் அதைத் தடுத்துவிட்டார்கள்.

பின்னர் 2009இல் யுத்தம் முடிவுற்றதும் 'தமிழ் கட்சிகளின் ஒன்றியம்' என்ற பெயரில் மீண்டும் ஒரு முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால், அந்த அமைப்பில் பிற்போக்குத் தமிழ் தலைமையினதும், புலிகளினதும் பிரதிநிதிகள் புகுந்து கொண்டு அதை உருப்பெற விடாமல் சீர்குலைத்துவிட்டார்கள். தற்போது உருவாகியிருக்கும் முன்னணி இந்த இரண்டு காலகட்டங்களினதும் அனுபவங்களை ஒரு படிப்பினையாகக் கொள்ள வேண்டும்.

புதிய முன்னணியைப் பாதுகாத்து முன்னெடுத்துச் செல்வதென்றால், முதலாவது விடயம் முன்னணிக்கென்று தெளிவான ஒரு கொள்கையும் வேலைத்திட்டமும் வகுக்கப்பட வேண்டும். அத்துடன் நாசகார சக்திகள் ஊடுருவி அமைப்பைச் சீர்குலைத்துவிடாமல் இருப்பதற்கு, கட்டுக்கோப்பான ஸ்தாபன ஒழுங்கமைப்பு முறை ஒன்றும் உருவாக்கப்பட வேண்டும்.

அப்படி இருந்தால்தான், புதிய முன்னணி பழைய பிற்போக்குத் தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமை போலல்லாது, ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களின் நியாயமான தேசிய ஜனநாயக உரிமைகளை ஏனைய மக்களின் அனுசரணையுடன் வென்றெடுக்க முடியும். புதிய வகையிலான அரசியல் முறை மூலம் ஆக்கபூர்வமான வழிமுறையில் செயல்பட்டு தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க புதிய முன்னணி துணிச்சலுடன் முன்செல்ல வேண்டும்.

அதைவிடுத்து, பத்தோடு பதினொன்றாக புதிய தலைமையும் மாறிவிடக்கூடாது.

---

## வானவில்

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

sunvaanavil@gmail.com

இதுவரையில் வெளிவந்த வானவில் இதழ்களை **http://manikkural.wordpress.com/** என்ற இணையத்தள முகவரியில் வாசிக்கலாம்.

---

## மேதின வாழ்த்துக்கள்!

'வானவில்' வாசகர்கள் அனைவருக்கும் சர்வதேச தொழிலாளி வர்க்க தினமான மேதினத்தை முன்னிட்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**-ஆசிரியர் குழு**

# உ005இற்கு முன்னரே மகிந்தவுக்கு எதிராக சந்திரிக செயற்படத் தொடங்கிவிட்டார்! குட்டை உடைத்தார் ஜனாதிபதி மைத்திரி!!

2005 இல் மகிந்த ராஜபக்ச முதன்முதலாக ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர், அவர் நாட்டையும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும் தனதும், தனது குடும்பத்தினதும் சர்வாதிகாரப் பிடிக்குள் கொண்டு வந்து, தன்போன்ற கட்சியின் சிரேஸ்ட தலைவர்களை ஓரங்கட்டத் தொடங்கிய பின்னரே, தான் நாட்டையும் கட்சியையும் பாதுகாப்பதற்காக அவரை எதிர்க்கத் தொடங்கியதாக ஒரு பிரச்சாரத்தை கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் இருந்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிக குமாரதுங்க நடாத்தி வருகின்றார். வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் மகிந்தவைத் திட்டுவதையே தனது வழமையாக்கியும் கொண்டிருக்கிறார் சந்திரிக.

ஆனால், சந்திரிக கூறுவது உண்மையல்ல, அது முற்றுமுழுதான பொய் என்பதை அவரது சாகாவும், இன்றைய ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவே அம்பலப்படுத்தியிருக்கிறார்.

அதாவது, 2005இல் மகிந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட இருந்த நேரத்திலேயே சந்திரிக, மகிந்தவுக்கு எதிராகச் செயற்பட ஆரம்பித்திருக்கிறார் என்ற விடயத்தை அம்பலத்துக்குக் கொண்டு வந்திருக்கிறார் ஜனாதிபதி மைத்திரி.

அண்மையில் காலியில் நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் கூட்டம் ஒன்றில் பேசிய ஜனாதிபதி மைத்திரி, 2005இல் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பாக மகிந்த போட்டியிடுவதை சந்திரிக முற்றிலும் விரும்பவில்லை எனத் தெரிவித்திருக்கிறார். இருந்த போதிலும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் கட்சியின் பொதுச் செயலாளர் என்ற வகையில் தான் மகிந்தவின் நியமனத்தை முற்றுமுழுதாக ஆதரித்ததுடன், மகிந்தவின் வெற்றிக்காக இதயசுத்தியுடன் இறுதிவரை பாடுபட்டதாகவும் மைத்திரி கூறியிருக்கிறார்.

இந்த அதிர்ச்சித் தகவலை வெளியிட்ட மைத்திரி அங்கு மேலும் கூறுகையில், "முன்னாள் ஜனாதிபதி சந்திரிக, மகிந்த 2005 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதை விரும்பவில்லை. மகிந்த வெற்றி பெறுவதை விட ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவதையே அவர் விரும்பினார். மகிந்தவை ஆதரிக்க வேண்டாம் என அவர் என்னைக் கேட்டபோது, அதிர்ச்சியும் வேதனையும் அடைந்த நான் விம்மலுடன் அந்த அறையைவிட்டு வெளியேறினேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.



மைத்திரி இந்த உண்மையை உடைத்ததுடன் மூலம், சந்திரிகவுக்கு மகிந்த மீது உள்ள தீராத கோபத்துக்குக் காரணம், நாட்டின் மீதும் சுதந்திரக் கட்சியின் மீதும் அவர் கொண்டுள்ள பற்றுத்தான் காரணம் என்ற அவரது பிரச்சாரம் பொய் என்பது நிருபணமாகின்றது.

இது ஒருவகையில், 2005இல் மகிந்த ஜனாதிபதி வேட்பாளராக நியமனம் பெற்றது ஏறக்குறைய 1990இல் ஆர்.பிரேமதாச ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நியமனத்தைப் பெற்றதற்கு ஒப்பானது. அப்போது ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன, தனது அரசின் பிரதமராக இருந்த பிரேமதாச தனக்குப் பின் ஜனாதிபதியாக வருவதை விரும்பவில்லை. ஆனால் ஜே.ஆரின் ஒரேயொரு மகன் ரவி ஜெயவர்த்தன ஜனாதிபதி வேட்பாளராவதற்குத் தகுதியற்று இருந்ததால், வேறுவழியின்றி பிரேமதாசவின் நியமனத்தை ஆதரிக்க வேண்டிவந்தது.

அதேபோல, சந்திரிகவுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தும் அவர்கள் அரசியலுக்கு வரக்கூடிய சூழல் இருக்காததால், வேறுவழியின்றி தனக்குப் பின் மகிந்தவுக்கு வேண்டாவெறுப்பாக வழிவிட வேண்டி இருந்தது. அவர் அப்படி மகிந்தவைவிட்டுப் பயப்பட்டதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று, சந்திரிகவின் தகப்பன் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கவுடன் சேர்ந்து சிறீலங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கிய ஸ்தாபக உறுப்பினர்களில் மகிந்தவின் தந்தை டி.ஆர்.ராஜபக்சவும் ஒருவர் என்றபடியால், அந்தச் செல்வாக்கால் கட்சியினர் மத்தியில் மகிந்தவுக்கு செல்வாக்கு ஏறபட்டுவிடும் என்பது.

இரண்டாவது காரணம், சந்திரிக போல அல்லாது மகிந்தவின் பிள்ளைகள், சகோதரர்கள், மாமன் – மச்சான் – மச்சாள் என மகிந்தவின் ஒரு பெரிய குடும்பப் பட்டாளமே சுதந்திரக் கட்சியின் முக்கிய பதவிகளில் இருந்தது. எனவே, ஒருகால் மகிந்தவிடம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவி போய்விட்டால், அது என்றென்றும் நிரந்தரமாகிவிடும், அதன் பின்னர் தனது பிள்ளைகள் அரசியலுக்குத் தயாராகும் போது,

ராஜபக்ச வம்ச குடும்பத்திடமிருந்து பண்டாரநாயக்க வம்ச குடும்பத்துக்கு கட்சியின் அதிகாரத்தை மீண்டும் எடுப்பது இயலாததாகப் போய்விடும் என சந்திரிக அஞ்சியமை.

அதன் காரணமாகவே 2005இல் மகிந்த ஜனாதிபதி வேட்பாளராவதை தூரநோக்குடன் சந்திரிக எதிர்த்திருக்கிறார் என்பது தெளிவாகின்றது. அதனால்தான் காத்திருந்து திட்டமிட்டுக் காய்நகர்த்திய சந்திரிக, மேற்கத்தைய சக்திகளின் ஆதரவு, மைத்திரியை கட்சியை விட்டு உடைத்தெடுத்தமை, ரணிலின் ஒத்துழைப்பு என்பன மூலம் மகிந்தவின் ஆட்சிக்குக் குழிபறித்தார். இங்கு அவர் நாட்டின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்காமல், பிரச்சினையை தனது குடும்பத்துக்கும், மகிந்தவின் குடும்பத்துக்கும் இடையிலான அதிகாரப் போட்டியாகப் பார்த்ததின் விளைவாக, தனக்கு மூக்குப் போனாலும் எதிர்க்குச் சகுனப் பிழையாக வர வேண்டும் என்ற கணக்கில் அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள், இலங்கை மக்களின் மீது ஓர் ஏகாதிபத்திய சார்பு, பிற்போக்கு ஆட்சியை சுமத்துவதற்கு வழி ஏற்படுத்திவிட்டுள்ளது.

சந்திரிக, ஆரம்பத்திலிருந்தே மகிந்தவுக்கு எதிராகச் செயற்பட்டார் என்ற விடயத்தை ஜனாதிபதி மைத்திரி திடீரென ஏன் பகிரங்கப்படுத்தினார் என்ற கேள்வி பலருடைய மூளையைக் குடைய ஆரம்பித்துள்ளது. அதுபற்றி இரண்டு ஊகங்கள் நிலவுகின்றன.

ஒன்று, சந்திரிகவின் தொடர்ச்சியான மூர்க்கத்தனமான மகிந்த எதிர்ப்பால், கட்சித் தலைவராக இருந்தும் மைத்திரியால் சுதந்திரக் கட்சியை இன்னமும் கூடத் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவர முடியாமல் இருப்பதுடன், கட்சி பிளவுபடும் நிலையும் உருவாகி இருப்பது.

இரண்டாவது, மைத்திரி இரண்டாவது தடவையாக தான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை எனத் தனது பதவியேற்பு வைபவத்தில் சொல்லியிருந்தாலும், எல்லோரையும் போலவே பதவியில் அமர்ந்ததும் அதைத் தொடர எழும் ஆசை மைத்திரிக்கும் ஏற்பட்டிருப்பது. அத்துடன் மகிந்தவிடமிருந்து பதவியை மைத்திரியிடம் கைமாற்றுவதற்கு சந்திரிக வழி வகுத்திருந்தாலும், அது தனது பிள்ளைகள் அரசியலுக்கு வரும் வரையிலான ஒரு இடைக்கால ஏற்பாடு என்பதை மைத்திரி புரிந்து கொண்டிருப்பது.

இந்த விடயங்களால் மைத்திரிக்கும் சந்திரிக்கவுக்கும் இடையிலான உறவுகள் முன்புபோல நல்லாக இல்லை என்ற அரசல் புரசல்களான கதைகள் அரசியல் அரங்கில் உலா வருகின்ற நேரத்தில்தான், மைத்திரியின் காலி பேச்சு வெளிவந்திருக்கிறது. மைத்திரி தனது இலக்கை மகிந்தவை விட்டு சந்திரிகவை நோக்கித் திருப்பியிருக்கிறரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

***- சாள்ஸ்***

## மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மீதான தாக்குதலுக்கு
# வைத்திய அதிகாரிகள் சங்கம் கண்டனம்!

இலங்கையில் மருத்துவக் கல்வியைத் தரம் குறைப்பதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்த மருத்துவ மாணவர்கள் மீது பொலிசார் மிருகத்தனமான முறையில் தாக்குதல் நடாத்திய சம்பவத்தை அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் (Government Medical Officers Association) வன்மையாகக் கண்டிப்பதாக சங்கத்தின் செயலாளர் டொக்டர் நலிந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

டொக்டர் ஹேரத் இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், “சட்டத்தைத் துஸ்பிரயோகம் செய்து, பொதுமக்களின் கோடிக்கணக்கான பணத்தைச் சூறையாடி, தரமற்ற மருத்துவச் சான்றிதழ்களை வழங்கி அவர்களைத் தவறாக வழிநடாத்தும் SAITM என்ற தனியார் மருத்துவக் கல்லூரி மீது அரசாங்கத்துக்கு உள்ள ‘காதலையே’ மருத்துவ மாணவர்கள் மீதான தாக்குதல் எடுத்துக் காட்டுகின்றது” எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில், “எந்தவொரு மருத்துவக் கல்வியும் நோயாளிகளின் உயிருடன் விளையாடாது உண்மையில் அவர்களைப் பாதுகாக்கக்கூடிய தகுதியான கல்வியையும், தராதரத்தையும் உடையதாக இருக்க வேண்டும். இதுபோன்ற மோசமான தாக்குதல் சம்பவங்களோ அல்லது தற்போது இலங்கையில் நிலவுகின்ற தரமான இலவச மருத்துவக் கல்விக்காக மாணவர்கள் போராடி உயிர் துறக்கின்ற நிலைமைகளோ எதிர்காலத்தில் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். அரசாங்கத்திற்கு அதில் அக்கறை இருக்குமானால், SAITM என்ற தனியார் மருத்துவக் கல்லூரியை அரசாங்கம் உடனும் பொறுப்பேற்று, அதன் தராதரத்தை மீளக் கட்டியெழுப்ப வேண்டும்” எனத் தெரிவித்துள்ளார்.

“பாராளுமன்றம் வரலாற்று வழியில் தோன்றுவதாகும், முதலாளித்துவப் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்குப் போதுமான பலமுடையோராகும் வரை நம்மால் அதை அகற்றிவிட முடியாது. குறிப்பிட்ட வரலாற்று நிலைமைகளில் முதலாளித்துவப் பாராளுமன்றத்தில் உறுப்பினராய் இருந்து கொண்டுதான் முதலாளித்துவ சமுதாயத்தையும் பாராளுமன்ற முறையையும் எதிர்த்துப் போராட்டம் நடத்த முடிகிறது. போராட்டத்தில் முதலாளித்துவ வர்க்கம் கையாளும் அதே ஆயுதத்தைப் பாட்டாளி வர்க்கமும் – முற்றிலும் மாறான குறிக்கோள்களுக்காக என்பதைக் கூறத் தேவையில்லை – உபயோகித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. இவ்வாறு இல்லை என்று உங்களால் சாதிக்க முடியாது. இதனை நீங்கள் நிராகரித்து வாதாட விரும்பினால், உலகின் புரட்சிகர நிகழ்ச்சிகள் அனைத்தின் அனுபவத்தையும் நீங்கள் விட்டொழிக்க வேண்டியிருக்கும்.”

**–பாராளுமன்ற முறை பற்றிய லெனினின் சொற்பொழிவு கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் 1920 ஆண்டு ஆகஸ்டு 2 இல் நிகழ்த்தப் பெற்றது .**

# தலித் இலக்கியப் போக்குகள் குறித்து முற்போக்கு நாவலாசிரியர் டி.செல்வராஜ்

இந்திய உப — கண்டத்தின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் தீண்டப்படாதவர்களாக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் தலித் மக்களும், மலை சாதியினருமாவர். ஒரு பக்கம் கொடூரமான முதலாளித்துவச் சுரண்டலுக்கும், மறுபக்கம் வருணதர்ம தீண்டாமை என்கிற நிலமான்ய அமைப்பின் சமூகப் பொருளாதார பண்பாட்டு அடக்குமுறைக்கும் ஆளாகி அல்லல்படும் இம்மக்கள், இந்த நாட்டின் பாட்டாளி வர்க்க, அரைப் பாட்டாளி வர்க்க (Semi Proletariat) மக்கள் தொகையில் பிரிக்க முடியாத பகுதியாகும்.

இம்மக்களின் பங்களிப்பின்றி, இன்றைய முதலாளித்துவ — நிலமான்ய ஆளும் வர்க்கத்தை எதிர்கொள்ள முடியாது. எனவே தீண்டாமை எதிர்ப்பு என்பதும், சாதிய ஒழிப்பு என்பதும் ஜனநாயக இயக்கங்களின் கடமையாகும். எனவே, சமூக விடுதலைக்காக நிற்கும் எந்த ஒரு ஜனநாயக இயக்கமும் இந்த மக்களின் விடுதலையின்பால் நிற்பது என்பது இந்தக் காலகட்டத்தின் கட்டாயமாகும்….

மார்க்சிய சிந்தனை வயப்பட்ட இடதுசாரித் தலைவர்கள், தேசவிடுதலையின் போதும், தேசவிடுதலைக்குப் பிறகும், தலித் மக்களுடைய இயக்கத்தையும், தீண்டாமை ஒழிப்பு என்பதையும் சமூக விடுதலையினுடையவும், வர்க்கப் போராட்டத்தினுடையவும் பிரிக்க முடியாத அங்கமாகவே கருதிச் செயல்பட்டனர். அம்மக்களோடு இரத்தமும் சதையுமாகக் கலந்துநின்று அம்மக்களின் விடுதலைக்காகப் போராடினர். அம்மக்களின் அடிமைத்தளைகளை உடைத்தெறிவதற்கான இயக்கத்தின் முன்னணியில் நின்றனர். பண்ணை அடிமைத்தனத்தையும், தீண்டாமைக் கொடுமையினையும் எதிர்த்துச் சக்திமிக்க இயக்கங்களை நடத்தினார்கள். நிலமான்ய அமைப்பின் உறைவிடமான தஞ்சை மண்ணில் தலைவிரித்தாடிய சாட்டையடிக் கொடுமைக்கும், சாணிப்பால் புகட்டும் தண்டனைக்கும் முடிவுகட்டியது இடதுசாரி இயக்கம்தான் என்பது நியாய புத்தி படைத்த எவராலும் மறுக்க முடியாத உண்மையாகும். நிலமான்ய அமைப்புக்கு எதிராகப் போடப்பட்டிருக்கும் சட்டங்கள் கூட இத்தகு இயக்கங்களினது போராட்டங்களின் விளைவாகும். துரதிஸ்ட்டவசமாகத் தமிழகமெங்கும் நடைபெற்ற இத்தகு போராட்டங்கள், எழுச்சிகள் ஆகியவை பற்றிய சரித்திரப் பதிவுகள் மிகமிகக் குறைவு. இலக்கியப் பதிவுகளும் மிகமிகக் குறைவு. ஆனால் இந்தப் போராட்டங்களைக் கருவாகக் கொண்டு படைக்கப்பட்ட நாவல்கள் நவீன இலக்கியத்தில் ஒதுக்கிவிட முடியாத இடத்தை வகிக்கின்றன.



டி.செல்வராஜ்

மராட்டிய மாநிலத்தில் மகான் கோவிந்தராவ் பூலே (1827 — 1890) மற்றும் அண்ணல் அம்பேத்கார் அவர்களும், தலித் மக்களின் சமூகப் பொருளாதார பண்பாட்டு ஒடுக்குமுறைகளுக்கு எதிராக நடத்திய இயக்கங்கள் காரணமாகவும், அவர்களால் உருவாக்கப்பட்ட பள்ளிகளில் படித்து உணர்வு பெற்ற மகர் இன இளைஞர்களால் 1960களில் ஆரம்பிக்கப்பட்ட தலித் இயக்கம், தலித் இலக்கிய இயக்கம் மராட்டிய இலக்கியத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திற்று (இன்று அது மங்கிக் கொண்டிருக்கிறது). இந்த இலக்கிய இயக்கம் 1980களில் தமிழ் இலக்கியத்திலும் படித்த மத்தியதர வர்க்கப் படைப்பாளிகள் வாயிலாகக் கால் பதிக்கத் தொடங்கியுள்ளது. ஆனால் துரதிஸ்ட்டவசமாக பெரும்பாலான தலித் படைப்புக்கள் அம்மக்கள் அனுபவிக்கும் இன்னல்கள், அவலங்கள், கேவலங்கள், அவஸ்தைகள் ஆகியவை பற்றியே சித்தரிக்கின்றனவே அல்லாமல், ஏனோ அவஸ்தைகளையும், அவமானங்களையும் எதிர்த்துச் சமர் புரியும் தலித் இன மக்களையும் அவர்களது போராட்டங்களையும் இலக்கியத்தில் கொண்டுவர மறுக்கின்றன.

உண்மையில் தலித் இலக்கியக் கோட்பாடு, தலித் மக்களின் விடுதலைக்கான கோட்பாட்டின் ஒரு பகுதியாகத்தான் இருக்க முடியும், உழைக்கும் பாட்டாளி மக்களின் மறுக்க முடியாத ஒரு பகுதியாகத்தான் இருக்க முடியும். தலித் மக்கள், தம்மீது சுமத்தப்பட்டுள்ள சாதிய அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுவதை மட்டுமே தளமாகக் கொண்டு, உழைக்கும் மக்களின் ஒட்டுமொத்த விடுதலையினின்றும் வேறுபட்டுத் தனித்து இயக்கம் நடத்துவதும், இலக்கியம் படைப்பதும் கடுமையான முரண்பாட்டிலும், சோர்விலும் கொண்டு சேர்க்கும். இப்படி ஒரு நிலைமை மராட்டிய இலக்கியத்தில் ஏற்பட்டிருப்பதை தயாபவர் வேறுவிதமாகக் குறிப்பிடுகிறார்.

பெரும்பாலான தலித் படைப்புகள், சமூகத்தின் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட, இம்மக்களின் அவமானங்களையும், அவலங்களையும் மட்டுமே சித்தரிப்பதின் காரணமாகவோ என்னவோ, தலித் இலக்கியவாதிகளில் ஒருசாரார் தலித் இலக்கியமானது பின் நவீனத்துவ (Post Mordernism) இலக்கியக் கோட்பாட்டுக்கு உட்பட்டது என்றும், நுண் அரசியலாகப் (Fragmentation) பார்க்கப்பட வேண்டிய இலக்கியப் போக்கு என்றும் வகைப்படுத்த ஆரம்பிக்கின்றனர்.

உலக மகாயுத்தத்தின் அழிவினைக் கண்டு பேதலித்துப்போன அய்ரோப்பிய புத்திஜீவிகளின் அழுகுணிச் சித்தர்களின் பின்நவீனத்துவக் கோட்பாடாகும் பின் நவீனத்துவக் கோட்பாடு, வெறுப்பு, அவநம்பிக்கை, அச்சம், குழப்பம், விகாரமான எண்ணப் போக்கு - சொல்லப்போனால் மனிதனை ஒருவித பைத்தியக்கார நிலைமைக்குத் தள்ளும் போக்கு இது. முடிவாகச் சொல்லப் போனால், பின் நவீனத்துவம் மனிதனையும், இயற்கையையும் புறக்கணிக்கிறது. பின் நவீனத்துவம் என்ற வார்த்தை ஜாலத்தில் தலித் படைப்பாளிகள் இந்த வலையில் வீழ்ந்துபடாதிருப்பாளர்களாக!

**தொடர்ச்சி 6ம் பக்கம் பார்க்க…**

# புகழ்பெற்ற தஞ்சாவூர் ஓவியங்கள் தயாரிக்கும் முறை

புகழ்பெற்ற தஞ்சாவூர் ஓவியங்கள் ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த வரலாற்றைக் கொண்டவை. அந்த ஓவியங்களில் இராமர் பட்டாபிசேகம் பற்றி வரையப்பட்ட ஓவியம் உலகப் புகழ் வாய்ந்தது. சோழர் ஆட்சிக் காலத்திலேயே இந்த ஓவியக் கலை உருவாக்கப்பட்டது. இந்த ஓவியத்தில் உள்ள ஒரு சிறப்பு என்னவென்றால், பல நூறு ஆண்டுகள் ஆனாலும் இந்த ஓவியங்கள் நிறம் மங்காமல் இருப்பதுதான்.

இந்த ஓவியங்களின் தயாரிப்பு பற்றி தஞ்சாவூர் ஓவியக் கலைஞர் ஸ்ரீரங்கம் எல்.ராமானுஜம் 'கல்கி' வார இதழுக்கு அளித்த பேட்டியிலிருந்து ஒரு பகுதி இதோ

- **தஞ்சாவூர் ஓவியங்கள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன? அதனைச் சுருக்கமாகக் கூறுங்களேன்**

"தஞ்சாவூர் ஓவியம் உருவாக்கப்படும் விதத்தினை அத்தனைச் சுருக்கமாகக் கூறிவிட முடியாது. அதன் செய்முறைகளும், செய்நேர்த்தி முறைகளும் மிகவும் விரிவானவை. இருப்பினும், என்னால் இயன்றளவு சுருக்கமாகச் சொல்ல விழைகின்றேன்.

பலாப்பலகை அல்லது தேக்குப் பலகையில் காடா துணியினைப் புளியங்கொட்டையில் உருவாக்கிய பசையினைக் கொண்டு ஒட்டிக் கொள்ள வேண்டும். (புளியங்கொட்டைப் பசை தயாரிப்பதே தனிக்கலை) அதனைக் காய வைக்க வேண்டும். சீமைச் சுண்ணாம்பு (தற்போது சாக் பவுடர்), புளியங்கொட்டைப் பசை ரெண்டையும் ஒன்றாகக் கலந்து, பலகையில் ஒட்டப்பட்டிருக்கும் துணி மேல் பிரஸ்ஸால் பூச வேண்டும். நிழலில் காய வைத்து எடுத்த பின்னர், 320ஆம் நெம்பர் வாட்டர் ப்ரூப் எமரி சீட் கொண்டு தேய்த்து வழவழப்பாக்க வேண்டும். படம் வரையத் தோதாகி விடும். நாம் உருவாக்க



வேண்டிய கடவுள் உருவப்பட ஸ்கெட்ச்சினை பலகையின் மீது வைத்து அதனடியில் கார்பன் பேப்பர் வைத்து படம் ஸ்கெட்ச் வரைய வேண்டும்.

அவ்வாறு படம் வரையும்போது தேவையான இடத்தில் பச்சை, சிவப்பு, வெள்ளை, சதுரம்-வட்டம் வடிவமான கற்களை ஒட்ட வேண்டும். அந்தக் கற்களுக்கு மேலே சாக் பவுடரும் கருவேல மரக்கோந்தும் தண்ணீர் விட்டுக் கலந்து (இதற்கு 'மக்கு' எனப் பெயர்) கற்களைச் சுற்றி கோடு வரைய வேண்டும். அதன் பின்னர் விதானங்கள், ஆபரணங்கள், ஆசனங்கள் மற்றும் முக்கியமான பகுதிகளுக்கு மக்கினை மேடாக வைக்க வேண்டும். அவைகளுக்கு மேலே மெலிதான பிரசினால் மக்கினைத் தொட்டெடுத்து டிசைன்கள் வரைய வேண்டும். காய்ந்த பிறகு தங்க ரேக்குகளை அளவுக்கேற்றார் போல வெட்டி, ரேக்கின் பின்புறம் கருவேல மரக்கோந்து தடவி, மக்கு வைத்த மேடான இடங்களில் ஒட்ட வேண்டும். ஒட்டிவிட்டு துணியினால் நன்கு அழுத்த வேண்டும்.

கடவுள் உருவங்களுக்குத் தேவையான வர்ணக் கலவைகளை தேவையான இடங்களில் நிரப்ப வேண்டும். நிரப்பிய வர்ணங்களுக்குத் தகுந்தாற்போல மாலைகள், அலங்காரத் துணிகள் வரைந்துவிட்டு கடவுள் உருவங்கள் கை, கால்கள் எழுதிவிட்டு, முகம் எழுத வேண்டும். முகம் எழுதிய பின்னர், நல்ல நாள், நல்ல நேரம் பார்த்து கண் திறக்க வேண்டும். தடம் மாறாத... தஞ்சாவூர் ஓவியம் ரெடி 1500 ரூபாயிலிருந்து மூன்று லட்ச ரூபாய் வரைக்குமாக, தஞ்சாவூர் ஓவியங்கள் கிடைக்கின்றன. கடந்த மாதம் பதினாறு அடி நீளம் 5 அடி உயரம் கொண்ட ராமர் பட்டாபிசேக தஞ்சாவூர் ஓவியம் உருவாக்கி கர்நாடக மாநிலத்தின் தும்கூருக்கு அனுப்பி வைத்தோம். அதன் மதிப்பு இரண்டே கால் லட்ச ரூபாய்" என விவரிக்கிறார் ராமானுஜம்.

**புளியங்கொட்டை பசை:**

புளியங்கொட்டைகளை ஒன்றிரண்டாக உடைத்து தண்ணீரில் ஊறவைத்து ஆட்டுக்கல்லில் அரைத்து, தண்ணீர் கலந்து பாத்திரத்தில் இட்டுக் கொதிக்க வைத்துப் பசையாக காய்ச்ச வேண்டும். புளியங்கொட்டைப் பருப்பானது பசையாக மாறிப்போகும். அதன் மேல்தோல் (ஓடு) பசையுடன் கலந்து பூச்சிகள் அரிக்காமல் காக்கும்.

எத்தனை நூற்றாண்டுகள் ஆனாலும், தஞ்சாவூர் ஓவியங்கள் அழியாமல் இருப்பதன் அடிப்படைக் காரணம், இந்தப் புளியங்கொட்டை பசைதான்.
*

---

5ம் பக்கத்தொடர்ச்சி...

(டி.செல்வராஜ் தமிழகத்தின் பிரபலமிக்க முற்போக்கு நாவலாசிரியர்களில் ஒருவர். அவரது முதலாவது நாவலான 'தேநீர்' பலரது கவனத்தை ஈர்த்த ஒரு படைப்பாகும். திண்டுக்கல் பகுதியில் தோல் பதனிடும் தொழிலில் ஈடுபட்டுள்ள மிகவும் தாழ்த்தப்பட்ட சமூகமான பறையர் சாதி மக்களின் கொடூரமான அவல வாழ்க்கையை வைத்து அவர் எழுதிய 'தோல்' என்ற நாவல் 2012 இல் சாகித்திய அகதமி பரிசு பெற்றது. அந்த நாவலுக்கு அவர் எழுதிய முன்னுரையின் ஒரு பகுதியே மேலே தரப்பட்டுள்ளது) *

# இராணுவப் புலனாய்வுக்கு உதவும் முன்னாள் புலிகள்!

அண்மையில் சாவகச்சேரியில் கண்டெடுக்கப்பட்ட புலிகளின் தற்கொலை அங்கியுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டவர்களான ராம் (அம்பாறை), நகுலன் (கோப்பாய்), தயாளன் (திருகோணமலை) ஆகிய மூன்று முன்னாள் புலித் தளபதிகளும் இலங்கை இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவினருடன் சேர்ந்து செயற்பட்டவர்கள் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்திருக்கிறார்.

இதுபற்றி கருத்து வெளியிட்ட குணசேகர, "இந்த மூவரும் புலிகளின் தீவிரமான செயற்பாட்டாளர்கள். இவர்கள் சரணடைந்த பின்னர் முறைப்படியான புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படவில்லை. உதாரணமாக, ராம் ஆக 45 தினங்களே புனர்வாழ்வு பெற்றுள்ளார். குறைந்தபட்சம் ஒரு வருடம் இவர்கள் புனர்வாழ்வு பெற்றிருக்க வேண்டும். இந்த மூவரும் தற்போது பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் (Terrorist Investigation Department) கைது செய்யப்பட்டு சாவகச்சேரி தற்கொலை அங்கியுடன் இவர்களுக்குத் தொடர்பு உள்ளதா என்ற சந்தேகத்தின் பேரில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். இவர்கள் ஏன் ஒரு வருடகால குறைந்தபட்ச புனர்வாழ்வுக்கு முன்னர் விடுதலை செய்யப்பட்டார்கள் என எனக்குத் தெரியவில்லை. ஆனால் அவர்கள் இராணுவப் புலனாய்வுப் பிரிவுடன் சேர்ந்து வேலை செய்து வருகின்றனர்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளரின் இந்தக் கருத்துக்கள் குறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணசேன ஹெட்டியாராய்ச்சி கருத்து எதனையும் கூற மறுத்துவிட்டார். ஆனால், "புலனாய்வு சம்பந்தப்பட்ட விடயங்கள் குறித்து ஊடகங்களிடமோ, வேறெவருமுடனோ நாம் பேச முடியாது" என்று மட்டும் குறிப்பிட்டுள்ளார். அவரது இந்தக் கருத்து கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் புலிகளுக்கும், இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கும் இடையிலான தொடர்பு பற்றிய விடயத்தை மேலும் கனதியாக்கிவிட்டுள்ளது.

## புனிதன்

2009இல் புலிகள் அழிக்கப்படுவதற்கு முன்னர், அரசாங்கத்தின் உளவாளிகள் என்றும், மாற்று இயக்க ஆதரவாளர்கள் என்றும், புலிகள் ஆயிரக்கணக்கானோரை (சுமார் 30,000 வரை என்றொரு தகவல் உண்டு) கொலை செய்திருக்கின்றனர். ஆனால், அதே புலிகளின் முக்கிய முன்னாள் தளபதிகள், தமிழ் மக்களை இலட்சக்கணக்கில் இனப்படுகொலை செய்ததாக புலிகளாலும், இன்று எஞ்சியிருக்கும் அவர்களது மிச்சசொச்சங்களாலும் குற்றஞ்சாட்டப்பட்டு வரும் அதே இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவினருடன் இன்று இணைந்து வேலை செய்து வருகிறார்கள் என்றால், அரச தரப்பாலும் புலித் தரப்பாலும் இலங்கையில் கொன்று குவிக்கப்பட்ட இலட்சக்கணக்கான அப்பாவி மனித உயிர்களின் பெறுமதி இவ்வளவுதானா? இவர்கள் இரு தரப்பினர்களும் எதிர் எதிராக நின்று 'குருசேத்திரப் போர்' எனச் சொல்லிப் போர் புரிந்தது எல்லாம் வேடிக்கைக்காகவா என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

இது ஒருபுறமிருக்க, கைது செய்யப்பட்டுள்ளவர்களின் அம்பாறை மாவட்ட முன்னாள் புலித் தளபதியான ராம் என்பவர், 1990இல் அப்போதைய ஜனாதிபதி பிரேமதாசவுக்கும் புலிகளுக்கும் இடையிலான தேன்நிலவு முறிந்தவுடன் கிழக்கு மாகாணத்தில் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்ட 600 பொலிசாரின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர் என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதே குற்றச்சாட்டு முன்னர் புலிகளின்



முன்னாள் கிழக்கு மாகாண விசேட தளபதி "கருணா அம்மான்" என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் மீதும், அவரது சகாவாக இருந்த "பிள்ளையான்" என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் மீதும் சுமத்தப்பட்டு இருந்தது. ஆனால் கருணா அதற்காக ஒருபோதும் கைதுசெய்யப்படவில்லை. அதேபோல தற்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கத்தின் கொலைச் சந்தேக நபராகக் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் இருக்கும் பிள்ளையானும் இந்த 600 பொலிசார் கொலை விவகாரமாக ஒருபோதும் கைது செய்யப்படவில்லை.

இந்த விடயங்களைப் பார்க்கும் போது, இலங்கையின் ஆளும் வர்க்கம் தனது தேவைகளுக்கு ஏற்ப சட்டங்களை வளைத்து நெளித்துப் பயன்படுத்துகிறதோ என்ற சந்தேகம்தான் ஏற்படுகிறது. அந்த வகையில் முன்னாள் புலித் தளபதிகளின் கைது நடவடிக்கைகளும் ஏதோ ஒரு தேவைக்காக அரச தரப்பினரால் நடாத்தப்பட்டதோ என்ற ஊகத்தை நிராகரிக்க முடியவில்லை.

இயற்கை என்பது – அதாவது வளர்ச்சி பெற்றுக் கொண்டே இருக்கும் பருப்பொருள் என்பது – மனிதனுக்கு அப்பால் சுயமாக இருந்து வருகிறது. இந்த இயற்கையை மனித அறிவு பிரதிபலிக்கிறது.

–லெனின்

# கடவுள் பாதி...

லியானார்டோ டாவின்ஸி தன்னுடைய ‘லாஸ்ட் சப்பர்’ ஓவியத்தில் யேசுவின் படம் வரைவதற்கு மாடல் தேடிக்கொண்டிருந்தார். வெகுநாட்களுக்குப் பிறகு ஒரு சர்ச்சில் வசீகரமும் தேஜஸும் நிறைந்த அழகுடன் கூடிய பீட்ரோ பெண்டினம்லி என்ற இளைஞரைப் பார்த்தார். மிகவும் அகமகிழ்ந்து அவரை மாதிரியாக வைத்து யேசுவை வரைந்து முடித்தார். ஆனால், யேசு உள்ளிட்ட அனைத்துச் சீடர்களையும் வரைந்து முடித்த பிறகு, அந்த ஓவியத்தில் இடம் பெறவேண்டிய பாவங்களால் இறுகிப் போயிருக்கும் முகத்துடன் கூடிய யூதாஸ் பாத்திரத்துக்கு உரிய முகத்தை அவரால் கண்டு பிடிக்கவே முடியவில்லை. அதனால் ஓவியம் முழுமையடையாமலேயே இருந்தது.

வெகுநாட்களுக்குப் பிறகு, ரோம் நகரில் டாவின்ஸி எதிர்பார்த்த அதே தோற்றத்தோடு ஒரு பிச்சைக்காரனைப் பார்த்தார். உடனே அவனுக்குப் பணம் கொடுத்து அழைத்து வந்து அமர்த்தி, ஓவியத்தை வரையத் தொடங்கினார். அப்போது அவனிடம் ‘உன் பெயர் என்ன?’ என்று கேட்டார் டாவின்ஸி. ‘நான் பீட்ரோ பெண்டினம்லி. பல வருடங்களுக்கு முன்னால் உங்களின் ஒரு ஓவியத்துக்கு யேசுவாக நான்தான் மாடலாக இருந்தேன்’ என்றான் அவன். ஒவ்வொரு மனிதனுமே கடவுளும் மிருகமும் கலந்து செய்த கலவை என்பதை உணர்கிறீர்களா?

*- எம்.ஸ்டாலின் சரவணன் - கறம்பக்குடி (ஆனந்தவிகடன்)*

# பசி ஒருபக்கம், பழுது ஒருபக்கம்!

உலகம் முழுவதும் வருடந்தோறும் பல இலட்சக்கணக்கான மக்கள் பசிபட்டினியால் இறப்பதாக

# நறுக்கு நொறுக்கு NUTS

தொடர்ந்து கேள்விப்பட்டு வருகின்றோம். ஆனால் மறுபக்கத்தில், உலக உணவு விவசாய ஸ்தாபனம் வெளியிட்டுள்ள ஒரு தகவலின்படி, உலகின் மொத்த உணவு உற்பத்தியில் சுமார் 2.9 றில்லியன் இறாத்தல் உணவு – அதாவது மொத்த உணவு உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கு பயன்படுத்தப்படாமல் வீணாவதாகத் தெரிய வந்துள்ளது.

இந்த பயன்படுத்தப்படாத உணவுப் பொருட்களில் கூடுதலானவை மரக்கறிகளும் பழங்களுமாகும். இவைகளில் 53 வீதமானவை அறுவடையின் போது, சேமிக்கப்படும்போது, பழரசமாக்கும்போது அல்லது டப்பாக்களில் அடைக்கப்படும்போது, மொத்த வியாபாரிகளின் கையிருப்பின்போது, வீடுகளின் சமையல் அறையில் இருக்கும்போது பழுதாகி விடுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

# யப்பானில் மக்கள் வசிக்காத 50 இலட்சம் ‘பேய்வீடுகள்’!

உலகின் முன்னேறிய நாடுகளில் ஒன்றான யப்பானில் தலைநகரான ரோக்கியோவைச் சுற்றியும், ஏனைய நகரங்களைச் சுற்றியும், சுமார் 80 இலட்சம் மக்கள் வசிக்காத வீடுகள் காணப்படுவதாக அரசாங்க புள்ளிவிபரமொன்று தெரிவிக்கின்றது.

யப்பானின் சனத்தொகையில் வயோதிபர்கள் அதிகரித்திருப்பதும், பிறப்பு வீதம் குறைந்திருப்பதுமே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. அடுத்த 50 ஆண்டுகளில் யப்பானின் சனக்தொகை மூன்றிலொரு பங்கால் குறைவடையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

பெண்களை அதிக பிள்ளைகளைப் பெறுமாறு ஊக்குவிப்பதும், வெளிநாட்டுக் குடிவரவாளர்களை அதிகரிப்பதுவுமே இதற்கான தீர்வு என சில நிபுணர்கள் யப்பானிய அரசுக்கு பரிந்துரைத்துள்ளனர்.

# சீனாவின் வளர்ச்சி

சீனா 1978இல் பொருளாதாரச் சீர்திருத்தங்களை மேற்கொண்டு சர்வதேச நாடுகளுடன் வர்த்தக உறவுகளை மேம்படுத்திய பின்னரான 37 வருட காலத்தில் அதன் உள்நாட்டு உற்பத்தி 26 மடங்கு அதிகரித்துள்ளது. அத்துடன் ஒப்பீட்டளவில் வறுமை நிலையிலிருந்த 60 கோடி மக்கள் (மொத்த சனத்தொகை 130 கோடி) அதிலிருந்து விடுவிக்கப்பட்டும் உள்ளனர்.

2015 ஒகஸ்ட் 29-30 திகதியிட்ட ‘நியுயோர்க் ரைம்ஸ்’ சர்வதேசப் பதிப்பில் வெளியான கட்டுரையொன்றில் இத்தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

# 1911இல் இலங்கையின் சனத்தொகை

மொத்த சனத்தொகை: 41 இலட்சம்

சிங்களவர்கள்: 27 இலட்சம்

இலங்கைத் தமிழர்கள்: 5 இலட்சம்

இந்திய வம்சாவழித் தமிழர்கள்: 5 இலட்சம்

முஸ்லிம்கள்: 2.5 இலட்சம்

பறங்கியரும் ஐரோப்பிய ஆசியர்களும்: 27,000

மலேயர்கள்: 13,000

ஐரோப்பியர்கள்: 7,600

# நமது உடல் உறுப்புகள்

நமது உடல், ஒவ்வொரு உடல் பாகத்திற்கென தனித்தனியே கடிகாரத்தின் அலாரத்தை முன்பதிவு செய்து கொண்டு சுழன்று கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு உறுப்புக்கும் அதன் பணியை செய்து முடிக்க இரண்டு மணி நேரம் ஒதுக்கியுள்ளது. இரண்டு மணி நேரம் முடிந்ததும் மீண்டும் அலாரத்தை அடுத்த உறுப்புக்கு மாற்றி விடுகிறது.

விடியற்காலை 3.00 மணிமுதல் 5.00 மணிவரை நுரையீரலின் நேரம். இந்த நேரத்தில் சுவாசப் பயிற்சி செய்து காற்றின் மூலம் வரும் பிராண சக்தியை உடலுக்குள் அதிகமாகச் சேகரித்தால் ஆயுள் நீடிக்கும். தியானம் செய்யவும் ஏற்ற நேரம் இது. ஆஸ்துமா நோயாளிகள் இந்த நேரத்தில் மிகவும் சிரமப்படுவார்கள்.

விடியற்காலை 5.00 மணிமுதல் 7.00 மணிவரை பெருங்குடலின் நேரம். காலைக்கடன்களை இந்த நேரத்துக்குள் முடித்தே தீர வேண்டும் மலச்சிக்கல் உள்ளவர்கள் இந்த நேரத்தில் எழுந்து கழிவறைக்குச் செல்லும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் நாளடைவில் மலச்சிக்கல் தீரும்.உயிரணுக்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக உள்ள நேரமும் கூட இதுவே.

காலை 7.00 மணி முதல் 9.00 மணி வரை வயிற்றின் நேரம். இந்த நேரத்தில் கல்லைத் தின்றாலும் வயிறு அரைத்து விடும். காலை உணவை அமிர்தம் போல் உண்ண வேண்டும் என்று சொல்வார்கள். இந்த நேரத்தில் சாப்பிடுவதுதான் நன்கு சமிபாடாகி உடலில் ஒட்டும்.

காலை 9.00 மணிமுதல் 11.00 மணி வரை மண்ணீரலின் நேரம். காலையில் உண்ட உணவை மண்ணீரல் செரித்து ஊட்டச் சத்தாகவும் இரத்தமாகவும் மாற்றுகிற நேரம் இது. இந்த நேரத்தில் பச்சைத் தண்ணீர் கூடக் குடிக்கக்கூடாது. மண்ணீரலின் செரிமான சக்தி பாதிக்கப்படும். நீரழிவு நோயாளிகளுக்கு மோசமான நேரம் இது.

முற்பகல் 11.00 மணிமுதல் பிற்பகல் 1.00 மணி வரை இதயத்தின் நேரம். இந்தநேரத்தில் அதிகமாகப் பேசுதல், அதிகமாகக் கோபப்படுதல், அதிகமாகப் படபடத்தல் கூடாது. இதயம் பாதிக்கப்படும். இதய நோயாளிகள் மிகமிக எச்சரிக்கையாக இருக்க வேண்டிய நேரம்.

பிற்பகல் 1.00 மணிமுதல் 3.00 மணி வரை சிறு குடலின் நேரம். இந்த நேரத்தில் மிதமாக மதிய உணவை உட்கொண்டு சற்றே ஓய்வெடுப்பது நல்லது.

பிற்பகல் 3.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை சிறுநீர்ப்பையின் நேரம். நீர்க்கழிவுகளை வெளியேற்ற சிறந்த நேரம்.

மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை சிறுநீரகங்களின் நேரம். பகல் நேர பரபரப்பிலிருந்து விடுபட்டு அமைதி பெற, எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்க,தியானம்செய்ய, வழிபாடுகள் செய்ய சிறந்த நேரம்.

இரவு 7.00 மணி முதல் 9.00 மணி வரை, பெரிகார்டியத்தின் நேரம். பெரிகார்டியம் என்பது இதயத்தைச் சுற்றி இருக்கும் ஒரு சவ்வு இதயத்தின் Shock absorber. இரவு உணவுக்கு உகந்த நேரம் இது.

இரவு 9.00 மணி முதல் 11.00 மணி வரை, டிரிப்பிள் கீட்டர் என்பது ஓர் உறுப்பல்ல. உச்சந்தலை முதல் அடி வயிறு வரை உள்ள மூன்று பகுதிகளை இணைக்கும் பாதை. இந்த நேரத்தில் உறங்கச் செல்வது நல்லது.

இரவு 11.00 மணி முதல் 1.00 மணி வரை பித்தப்பை இயங்கும் நேரம். இந்த நேரத்தில்தூங்காது விழித்திருந்தால் பித்தப்பை இயக்க குறைபாடு ஏற்படும்.

இரவு 1.00 மணி முதல் விடியற்காலை 3.00 மணி வரை கல்லீரலின் நேரம். இந்த நேரத்தில் நீங்கள் உட்காந்திருக்கவோ விழித்திருக்கவோ கூடாது. கட்டாயம் படுத்திருக்க வேண்டும். உடல் முழுவதும் ஓடும் இரத்தத்தை கல்லீரல் தன்னிடத்தே வரவழைத்து சுத்திகரிக்கும் நேரம் இது. இந்த பணியை நீங்கள் பாதித்தால் மறுநாள் முழுவதும் சுறுசுறுப்பின்றி அவதியுறுவீர்கள்.

# கஸ்ட்ரோவைக் கொல்ல 638 தடவைகள் முயற்சி!

1959இல் கியூபாவின் சர்வாதிகாரி பாடிஸ்டாவுக்கு (Fulgencio Batista) எதிரான மக்கள் புரட்சிக்குத் தலைமைதாங்கி, அதன் பினர் சோசலிச கியூபாவின் ஆட்சியதிகாரத்தில் ∴பிடல் கஸ்ட்ரோ இருந்த 50 வருட காலத்தில், அவரைக் கொலை செய்வதற்கு அமெரிக்க உளவு அமைப்பான சீ.ஐ.ஏ. 638 தடவைகள் முயற்சி செய்ததாக, அவரது மெய்ப்பாதுகாவலராக இருந்த ∴பேபியன் எஸ்கலேன்ற் (Fabian Escalante) என்பவர் ஆவணப்படுத்தியிருக்கிறார். இதை சனல் 4 நிறுவனம் ‘638 Ways to kill Castro’ என்ற தலைப்பில் தொலைக்காட்சித் தொடராகத் தயாரித்துள்ளது. இதே பெயரில் புத்தகமாகவும் அது வெளியாகி இருக்கிறது.

---

“ஒரு கலைப்படைப்பு தனது ஊடகத்தைத் தானே தேர்வு செய்கிறது. இந்தியனுக்கு இந்திய மொழிதான் ஊடகம் என்று நினைக்கிறேன்”.
- கன்னட எழுத்தாளர் யூ.ஆர்.அனந்தமூர்த்தி (1932-2014)

---

“வாழ்க்கை என்பது உங்களுடன் நீங்கள் மேற்கொள்ளும் முடிவில்லாத உரையாடல். நிதானத்தில் மௌனமாகவும், பித்து நிலையில் சத்தமாகவும் அது இருக்கிறது”.
- பழம்பெரும் நடிகை ஸோரா செகல் (1912 – 2014)

## இலங்கை – சீன உறவுகள்:

# 1952ஆம் ஆண்டுக்கு திரும்பி ஓடிய பிரதமர் ரணில்!

இலங்கையின் தற்போதைய மேற்கத்தைய சார்பு அரசாங்கத்தின் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏப்ரல் மாதத்தில் தான் விரும்பாத ஒரு நாட்டுக்கு அதாவது மக்கள் சீனத்திற்கு பிச்சா பாத்திரம் ஏந்தி ஒரு நடை போய்விட்டு வந்திருக்கிறார். சுமார் ஒன்றேகால் வருடத்திற்கு முன்னர் இதே அரசாங்கத்தின் ஜனாதிபதி, பிரதமர் உட்பட பெரும்பாலான தலைவர்கள் கிளப்பிய சீன விரோத வெறிக்கூச்சலைப் பார்த்தவர்களுக்கு, பிரதமரின் சீன விஜயம் ஆச்சரியத்தைக் கொடுத்திருக்கும் என நம்பலாம்.

வரலாறு சில தனிமனிதர்கள் விரும்பியவாறு செல்வதில்லை என்பதற்கு தற்போதைய இலங்கை அரசாங்கத்தின் சீனா பற்றிய கொள்கையில் ஏற்பட்டுள்ள 180 பாகை பல்டியடிப்பு ஒரு உதாரணம்.

2015 ஜனவரி 08ஆம் திகதி இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற போது, முன்னொருபோதும் இல்லாத வகையில் சீனாவுக்கு எதிரான பிரச்சாரம் உச்சத்தை எட்டியது. பாரம்பரியமாக சோசலிச எதிர்ப்பிலும், சீன எதிர்ப்பிலும் மூழ்கி எழுந்த ஐ.தே.க. மட்டுமின்றி, எதிரணி ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கிய மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவாக மாறிய, சீன நட்புறவை எப்போதும் பேணி வந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் சில உறுப்பினர்கள் கூட சீன எதிர்ப்பு வாந்தி எடுத்தனர்.

மகிந்த ராஜபக்சவின் அரசாங்கம் இலங்கையை சீனாவின் கொலனியாக மாற்றிவிட்டதாக அவர்கள் கூச்சல் போட்டனர். தாம் ஆட்சிக்கு வந்தால் மகிந்த அரசு சீனாவுடன் செய்து கொண்டுள்ள அத்தனை ஒப்பந்தங்களையும் ரத்துச் செய்யப்போவதாகவும் சூளுரைத்தனர். அவ்வாறே ஜனவரி 8இல் மைத்திரி ஜனாதிபதியாகத் தெரிவானதும், சீனாவின் உதவியுடன்



நிர்மாணிக்கப்படவிருந்த கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தை நிறுத்தி வைத்தனர். அதுபோல சீன உதவியுடன் நிறுவப்பட்ட அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள சர்வதேச விமான நிலையம் உட்பட பல சீன உதவித் திட்டங்களையும் நிறுத்தி வைத்தனர்.

**சச்சிதானந்தன்**

இந்தக் காலகட்டத்தில் இலங்கைக்கும் மேற்கு நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் தீவிரமாக வளரத் தொடங்கின. இலங்கை அரச தலைவர்கள் இந்த நாடுகளுக்கு அடிக்கடி போய்வந்தனர். அந்த நாடுகளின் உயர்மட்டத் தூதுவர்கள் ஒருவர் பின் ஒருவராக இலங்கைக்கு படையெடுத்த வண்ணம் இருந்தனர். இலங்கையின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு மேற்கு நாடுகளிடமும் இந்தியாவிடமும், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற ஏகாதிபத்திய நிதி நிறுவனங்கள் என்பனவிடமும் இலங்கை யாசகம் செய்தது.

ஆனால் எதிர்பார்த்த பயன் ஏதுவும் ஏற்படவில்லை. இலங்கையில் திட்டமிட்ட முறையில் ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி, தமக்குச் சார்பான அரசொன்றை ஆட்சியில் இருத்திய மேற்கு நாடுகளும், இந்தியாவும், இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு உதவத் தயாராக இருக்கவில்லை. இந்த நிலைமையிலேயே வெட்கத்தை விட்டு தாம் எட்டி உதைத்த சீனாவிடம் இலங்கை பிச்சைக் காவடி எடுக்க வேண்டி ஏற்பட்டது. தற்போதைய மைத்திரி – ரணில் அரசு எடுத்த முட்டாள்தனமான சீன விரோத நிலையால், சீன அரசாங்கத்துக்கு மட்டுமின்றி, இலங்கை அரசாங்கத்துக்கும் பல நூறு கோடி ரூபாக்கள் நஸ்டம் ஏற்பட்டதைப் பற்றி அரசாங்கம் எதுவித வருத்தமும் தெரிவிக்கவில்லை. முன்னைய அரசு பல கோடி ரூபாக்களை வீணடித்ததாக குற்றம் சாட்டும் தற்போதைய அரசு, தனது முட்டாள்தனத்தால் ஏற்பட்ட நஸ்டம் குறித்து கவலை ஏதும் இன்றி இருக்கின்றது.

இவர்களுடைய நடவடிக்கையைப் பார்க்கும் போது, இவர்கள் வரலாற்றிலிருந்து எந்தவிதமான பாடங்களையும் கற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. சீனா இலங்கையின் எல்லா நெருக்கடிகளின் போதும் தன்னலமற்று உதவிய வரலாற்றையும் புரிந்து கொண்டதாகவும் தெரியவில்லை. 1952இலும் அன்று ஆட்சியிலிருந்த டட்லி சேனநாயக்க தலைமையிலான ஐ.தே.க. அரசாங்கத்தை மிகப்பெரும் பொருளாதார நெருக்கடியில் இருந்து சீனா எப்படிக் காப்பாற்றியது என்பதைக்கூட மறந்து இவர்கள் செயற்பட்டிருக்கிறார்கள்.

1952இல் இலங்கைக்கு மிகப்பெரிய பொருளாதார நெருக்கடி ஒன்று உருவானது. 1948இல் சுதந்திரமடைந்த இலங்கையை ஆட்சி செய்த ஐ.தே.க. தலைமையிலான அரசு முழுக்க

முழுக்க மேற்கத்தைய சார்பாக இருந்தது. அந்தக் காலத்தில் இலங்கையில் நபர் ஒருவருக்கு வாராவாரம் 2 றாத்தல் அரிசி இலவசமாக வழங்கப்பட்டு வந்தது. ஆனால் இரண்டாம் உலக யுத்தம் முடிவடைந்த பின்னர் ஏற்பட்ட பொருளாதார மந்தநிலை காரணமாகவும், இலங்கையில் அரிசி உற்பத்தி வீழ்ச்சி அடைந்ததினாலும், உலகச் சந்தையில் அரிசி விலை அதிகரித்ததினாலும், இலங்கையில் அரிசிக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவியது. ஆனால் இலங்கைக்கு அது ஆதரித்த எந்த மேற்கு நாடும் இன்றுபோல் அன்றும் உதவ முன்வரவில்லை.

அதுமாத்திரமின்றி, இலங்கைக்கு அந்நியச் செலாவணி ஈட்டித்தந்த இயற்கை இறப்பரையும் உலகச் சந்தையில் செயற்கை இறப்பர் வந்ததால் விற்க முடியாத நிலை ஏற்பட்டது. அதனால் இலங்கை வேறு நாடுகளிடமிருந்து அரிசியை இறக்குமதி செய்வதற்கு அந்நியச் செலாவணியும் இருக்கவில்லை.

மறுபக்கத்தில், சீனா இலங்கையை விட ஒரு வருடம் பிந்தி 1949இல் விடுதலை அடைந்தபோதும், அது சோசலிச நாடாக இருந்ததால், மக்களின் பூரண ஒத்துழைப்புடன் அரிசியில் தன்னிறைவு அடைந்திருந்தது. ஆனால் மேற்கத்தைய சார்பான இலங்கை சோசலிச சீனாவுடன் இராஜதந்திர உறவுகளைக் கொண்டிருக்கவில்லை. (1956இல் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க ஆட்சிக்கு வந்தபின்னர்தான் இலங்கை, சீனா, சோவியத் யூனியன் போன்ற சோசலிச நாடுகளுடன் உறவுகளை ஏற்படுத்தியது)

இத்தகைய ஒரு சூழ்நிலையில் டட்லியின் அரசில் வர்த்தக அமைச்சராக இருந்த ஆர்.ஜீ.சேனநாயக்க (பிற்காலத்தில் தீவிர சிங்கள இனவாதியாக அறியப்பட்டவர்) ஒரு துணிச்சலான செயலில் இறங்க முன்வந்தார். அவர் டட்லியின் அனுமதியைப் பெற்று சீனாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு சீனாவிடமிருந்து அரிசி பெறுவதற்கான ஒரு ஒப்பந்தத்தை மிகச் சாதுரியமாகச் செய்து முடித்தார். வரலாற்றில் "இலங்கை – சீன அரிசி – றப்பர் ஒப்பந்தம்" எனக் குறிப்பிடப்படும் இந்த ஒப்பந்தம் 1952 டிசம்பர் 18ஆம் திகதி கையெழுத்தானது. ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் சோசலிச சீனாவின் புகழ்மிக்க முதலாவது பிரதமர் சௌ என்லாய் நேரடியாகக் கலந்து கொண்டார்.

இந்த ஒப்பந்தம் முதலில் 5 வருடங்களுக்கெனச் செய்துகொள்ளப்பட்ட போதும், பின்னர் 6 தடவைகள் புதுப்பிக்கப்பட்டு, 30 ஆண்டுகள் அமுலில் இருந்து, 1982இல் காலாவதியானது. இதில் இன்னொரு விசேட அம்சம் என்னவெனில் சீனா உலகச் சந்தை விலையைவிட இலங்கைக்கு குறைந்த விலையில் அரிசியை வழங்கியதுடன், இலங்கையிடமிருந்து உலகச் சந்தை விலையைவிட கூடுதலான விலைக்கு இறப்பரை வாங்கியதுதான்.

இவ்வாறு இலங்கை தனது உணவுத் தேவைக்கு தத்தளித்த போது தன்னலம் பாராது உதவி புரிந்த சீனாவுடன்தான் மைத்திரி – ரணில் அரசு நன்றியில்லாமல் போக்கிரித்தனமாக நடந்து கொண்டது. என்றாலும் தானே வெட்டிய குழிக்குள் விழுந்த இலங்கை அரசு, திரும்பவும் சீன அரசின் உதவியுடன்தான் மேலே எழும்பி வரவேண்டி இருந்திருக்கிறது.

ஒருவகையில் பார்த்தால், வரலாற்றிலிருந்து பாடம் எதனையும் கற்றுக் கொள்ளாத இலங்கை அரசின் ஐ.தே.க. பிரதமர், திரும்பவும் 1952ஆம் ஆண்டுக்குத் திரும்பி ஓடி, சீனாவின் உதவியைப் பெற்றிருக்கிறார். இனிமேலாவது இலங்கை அரசு மேற்கத்தைய சக்திகளினதும், இந்தியாவினதும் பூகோள நலன்களுக்கு தாளம் போடாமல் தனது உண்மையான நண்பர்களை இனம்கண்டு நடந்து கொள்ளுமா என்பதைச் சற்றுப் பொறுத்திருந்து பார்ப்போம். *

துன்பங்களுக்கு இடையில்தான் வாய்ப்புகள் ஒளிந்திருக்கின்றன.

–ஆல்பர்ட் ஐன்ஸ்ரைன்

# கியூபாவிடமிருந்து இலங்கை கற்றுக் கொள்ள வேண்டும்!

## – வாசுதேவா நாணயக்கார

"இலங்கையைப் போன்று கியூபா அந்நிய நாடுகளிடம் பிச்சைப் பாத்திரத்துடன் கையேந்துவதோ, வல்லமையுள்ள நாடுகளின் நிர்ப்பந்தத்திற்கு அடிபணிவதோ இல்லை. அந்த நாடு தனது சுயசார்பிலேயே பெரிதும் தங்கியுள்ளது. கியூபாவில் இலங்கையைப் போன்று அத்தியாவசியப் பொருட்களுக்கு வரி கிடையாது. அதனால் பொதுமக்களுக்குப் பொருட்கள் மலிவாகக் கிடைக்கின்றன. பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையிலான இடைவெளி மிகவும் குறைக்கப்பட்டுள்ளதால், தேசிய வருமானம் பொதுமக்களைச் சென்றடைகிறது. கியூபாவின் கல்வித்துறையும் சுகாதாரத்துறையும் இலங்கையை விட மிகவும் சிறப்பாக இருக்கின்றன. கியூபாவிடமிருந்து கற்றுக் கொள்வதற்கு எமது இலங்கைக்கு நிறைய விடயங்கள் இருக்கின்றன".

இவ்வாறு கூறியிருக்கிறார் இவ்வருட மேதினத்தின் போது கியூப அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று அந்நாட்டுக்குச் சென்று திரும்பியிருக்கும் ஜனநாய இடதுசாரி முன்னணியின் தலைவரும், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார. தனது கியூபப் பயணம் குறித்து கொழும்பில் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நடாத்திய வாசுதேவ மேலும் கூறியதாவது:

"அமெரிக்கா உலக நாடுகளின் கண்டனத்தில் இருந்து தப்புவதற்காக ஒரு பக்கத்தில் கியூபாவுடன் இராஜதந்திரத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு, மறுபக்கத்தில் தொடர்ந்து கியூபாவுக்கு எதிராகப் பொருளாதாரத் தடையை அமுல்படுத்துவதன் மூலம் இரட்டை வேடம் போடுகிறது. இது கியூப மக்களுக்கு நன்கு விளங்கும்.

அமெரிக்காவின் ஒரு டொலர் கியூபாவின் 85 சதங்களுக்குப் பெறுமதியாக வரையறுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கியூபாவின் சுற்றுலாத்துறை நல்ல வளர்ச்சி அடைந்துள்ளது. இது கியூபாவிடம் இருந்து இலங்கை கற்றுக் கொள்ள வேண்டிய விடயம்.

மேதினம் என்பது கியூபாவின் முக்கியத்துவம் வாய்ந்த தேசிய தினம். மேதினத்தில் பொதுமக்களுடன் படை வீரர்களும் இணைந்து அணி வகுத்துச் செல்கின்றனர். இவ்வருட மேதினத்தில் 750,000 வரையிலானவர்கள் கலந்து கொண்டனர்."
இவ்வாறு வாசுதேவ கூறினார்.

# யாழ் குடாநாட்டின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வழி என்ன?

வட மாகாணசபை பதவியேற்று இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் இன்றுவரை உருப்படியான செயல்கள் எதுவுமே செய்யாத நிலைமைதான் தொடர்ந்து நீடித்து வருகிறது. மத்திய அரசால் தனக்கு ஒதுக்கப்பட்ட அதிகாரங்களுக்குள்ளும் நிதிக்குள்ளும் செய்ய வேண்டிய எத்தனையோ விடயங்கள் இருக்க, அதை விடுத்து அரசியல் தீர்மானங்களை ஒன்றுக்குப் பின் ஒன்றாக நிறைவேற்றுவதிலேயே சபையை ஆளும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கவனம் செலுத்தி வருகிறது. தமிழரசுக் கட்சி காலத்திலிருந்து தமிழ் தலைமைகள் எல்லாமே மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குக் கவனம் செலுத்தாமல், அரசியல் கோசங்களை எழுப்பி மக்களை உணர்ச்சிவசப்படுத்தி தேர்தலில் வெற்றி பெறுவதையே ஒரு வழிமுறையாக மேற்கொண்டு வருகின்றன.



மாகாணசபைகளுக்கு உரிய அதிகாரங்களைப் பெறுவதற்காக வட மாகாணசபை குரலெழுப்பினால் பரவாயில்லை. அதை விடுத்து, கிழக்கில் ஒரு மாகாணசபை செயல்படக்கூடியதாக அதன் ஆதரவோ அல்லது கிழக்கு மக்களின் விருப்பமோ இன்றி, வட மாகாணசபை வடக்கையும் கிழக்கையும் இணைத்து சமஸ்டி அமைப்பு வழங்கப்பட வேண்டும் எனக் கோருவது சட்டரீதியற்றதும், ஜனநாயக விரோதமானதுமாகும். உயர் நீதிமன்ற நீதியரசராக இருந்த ஒருவரை முதலமைச்சராகக் கொண்டுள்ள வட மாகாணசபையே இப்படி நடந்து கொண்டால், சாதாரண தமிழ் அரசியல்வாதிகளைப் பற்றிச் சொல்லவா வேண்டும்?

வட மாகாணசபையின் தான்தோன்றித்தனமான செயல்பாட்டால் வட மாகாண அபிவிருத்திக்கென சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதி பூரணமாகச் செலவழிக்கப்படாமல் மீண்டும் திறைசேரிக்கே திரும்பிச் செல்லும் அவலநிலை தோன்றியுள்ளது.

வட மாகாணசபையின் செயலற்ற தன்மைக்கு அல்லது திறமையின்மைக்கு உதாரணமாக யாழ்ப்பாண குடாநாட்டு மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை ஆராய்ந்து பார்க்கலாம்.

குடாநாட்டு நீர் தொடர்ந்து உவர் நீராகி வருவது பல வருடங்களாக நிலவி வருகிறது. அத்துடன் இப்பொழுது மக்கள் அருந்தும் நீரும் மாசுள்ளதாக, தொற்றுநோய் அபாயம் உள்ளதாக இருக்கின்றது. இதை பல நீரியல் மற்றும் புவியியல் நிபுணர்கள் பல தடவைகள் சுட்டிக்காட்டியுள்ளனர். ஆனால் மத்திய அரசாங்கமோ, வட பகுதி மக்களின் நலனில் தீவிர அக்கறை செலுத்த வேண்டிய வட மாகாண சபையோ இந்த நிலை குறித்து கவலைப்பட்டதாக இல்லை.

**மாயோன்**

இந்த விடயத்தில் வட பகுதி மக்களைப் பொறுத்தவரை இரண்டு விடயங்களை எதிர்நோக்குகின்றனர். முதலாவது பிரச்சினை, அவர்கள் போதியளவானதும் சுத்தமானதுமான குடிநீரை எப்படிப் பெறுவது என்பது. இரண்டாவது பிரச்சினை, யாழ் குடாநாட்டின் தரைகீழ் நல்ல நீரை எப்படிப் பாதுகாப்பது, அதன் மட்டத்தை எப்படி உயர்த்துவது என்ற பிரச்சினை. இவை இரண்டும் அடிப்படையில் ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நீண்டகால, குறுகிய காலத் திட்டங்கள் தீட்டப்படுவது முக்கியம். இந்தப் பிரச்சினையைத் தீர்க்கப் புறப்பட்ட வட மாகாணசபை, நீண்டகாலத் திட்டத்தைப் பற்றி எதுவும் சிந்திக்காமல் குறுகிய காலத் திட்டத்தை மேற்கொள்ள முயன்றது. அதன்படி, முதலில் கிளிநொச்சியில் உள்ள இரணைமடு குளத்திலிருந்து தண்ணீர் பெறும் முயற்சியில் இறங்கியது. ஆனால், அங்குள்ள மக்களுக்கே தண்ணீர் பற்றாக்குறையாக இருந்ததால், அதற்கு எதிர்ப்புக் கிளம்பியதால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

உண்மையில் அந்தத் திட்டத்தை கிளிநொச்சி மக்களைப் பாதிக்காத வகையில் வேறு வழியில் நடைமுறைப்படுத்தியிருக்க முடியும். அதாவது, மதவாச்சி வரை கொண்டு வரப்பட்டுள்ள மாவலி கங்கை நீரை இரணைமடுக்குளம் வரை கொண்டு வருவதன் மூலம் யாழ் குடாநாட்டுக்கான நீரைப் பெற்றிருக்க முடியும். ஏற்கெனவே மதவாச்சியிலிருந்து வழியும் உபரி மாவலி நீர் அங்கிருந்து மன்னார் முருங்கனில் உள்ள கட்டுக்கரைக் குளத்திற்குச் சென்று பயன்படுகிறது என்றால், ஏன் இரணைமடு குளத்துக்கு அந்த நீரைக் கொண்டுவர முடியாது.

ஆனால், மாவலி கங்கையை இரணைமடுக் குளத்துக்குக் கொண்டு வருவது குறித்து வட மாகாணசபையோ அல்லது அதனை நிர்வகிக்கும் தமிழ்

தேசியக் கூட்டமைப்போ இதுவரை கவனம் செலுத்தவில்லை. தமது அரசியல் தேவைகளுக்காக தீர்மானங்கள் நிறைவேற்றிவரும் வட மாகாணசபை, இந்த விவகாரம் குறித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றவோ அல்லது அரசாங்கத்துடன் பேசவோ இதுவரை எந்த முயற்சிகளும் மேற்கொள்ளவில்லை.

இரணைமடுக்குள நீரைக் கொண்டு வருவது சாத்தியமில்லை எனக் கண்டதும், வட மாகாணசபை இன்னொரு பாரிய முயற்சியில் ஈடுபட முயன்று வருகிறது. அதாவது கடல்நீரை நல்ல நீராக மாற்றி யாழ்ப்பாண மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சியில் சபை இறங்கியுள்ளது. அதற்காக வடமராட்சி கிழக்கில் உள்ள ஆழியவளைக் கடல் பகுதி சபையால் தெரிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இந்தத் திட்டத்துக்கு ஆழியவளை மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து ஏற்கெனவே போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டால், அங்குள்ள சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதுடன், தமது வாழ்வாதாரமும் பாதிக்கப்படும் என மீனவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட அப்பகுதி மக்கள் அஞ்சுகிறார்கள்.

அதுவுமில்லாமல், இந்தத் திட்டம் பெரும் பணச் செலவும், சிரமங்களும் நிறைந்த 'வெள்ளை யானை'த் திட்டம் என இந்தத்துறை சம்பந்தமான வல்லுனர்களும் சுட்டிக் காட்டியிருக்கின்றனர். இத்தகைய திட்டம் ஒன்று தமிழகத்தில் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தீட்டப்பட்டு இன்றுவரை வெற்றிகரமாக அமுல்படுத்த முடியாமல் இருக்கின்றது.

இது ஒருபுறமிருக்க, இரணைமடு நீரை யாழ்ப்பாணம் கொண்டு வருவதோ அல்லது கடல்நீரை நல்ல நீராக மாற்றுவதோ ஒரு நிரந்தரமான தீர்வாக இருக்க முடியாது. யாழ்ப்பாணத்தின் நல்ல தண்ணீரைப் பாதுகாப்பதோ அல்லது அதன் மட்டத்தை உயர்த்துவதோ போன்ற நீண்டகால நோக்கிலான நடவடிக்கைகள் மூலமாகவே இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரமான தீர்வைக் காண முடியும். அதற்கு நம் முன்னோர்கள் செய்ததுபோல இயற்கையோடு இணைந்த திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்த வேண்டும்.

நமது நாட்டைப் பொறுத்தவரை, வட பகுதியிலும் சரி, ஏனைய பகுதிகளிலும் சரி, சில மாதங்களில் அளவுக்கு அதிகமான மழை பெய்து வெள்ளம் ஏற்படுவதும், சில மாதங்களில் கடும் வரட்சி ஏற்பட்டு குடிநீருக்குக்கூட தட்டுப்பாடு ஏற்படுவதும், தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது. நாடு முழுவதும் பெய்யும் மேலதிகமான மழைநீர் பெரும்பாலும் வீணாகக் கடலில் சென்று கலக்கின்றது. இந்த நீரைச் சேமித்து வைத்துப் பயன்படுத்துவதற்காக நதிகள் இல்லாத வடக்கு, வட மத்திய, கிழக்கு, வட மேற்கு மாகாணங்களில் முன்னைய காலங்களில் அரசாட்சி நடாத்திய மன்னர்கள் ஏராளமான குளங்களை வெட்டி வைத்திருக்கின்றனர். அவற்றின் மூலம் அந்தக் காலத்திய மக்கள் பெரும் பயன் பெற்று வந்திருக்கின்றனர்.

ஆனால், எமது நாட்டைக் கைப்பற்றி அரசாண்ட அந்நிய ஏகாதிபத்தியவாதிகள், குறிப்பாக பிரித்தானியர்கள், இந்தக் குளங்களுக்கு மேலால் வீதிகளைப் போட்டு பல குளங்களை நாசமாக்கி, எமது விவசாயப் பொருளாதாரத்தை அழிக்கவும் முயன்றனர். நாடு 1948இல் சுதந்திரமடைந்த பின்னர், மாறிமாறி பதவிக்கு வந்த அரசாங்கங்கள் இந்தக் குளங்களைப் புனரமைப்பதற்கென பல கோடி ரூபா நிதி ஒதுக்கிய போதிலும், குளங்கள் எதிர்பார்த்த அளவுக்கு தூர்வாரிச் செப்பனிப்படவில்லை. வட பகுதியிலும் இந்த நிலை நீடிக்கின்றது.

வடக்கிலும் பல நூற்றுக்கணக்கான குளங்கள் நம் முன்னோர்களால் வெட்டப்பட்டுள்ளன. உதாரணமாக யாழ் மாநகரசபை எல்லைக்குள்ளேயே ஆரியகுளம், புல்லுக்குளம், பரவைக்குளம், பண்டாரிக்குளம், நெடுங்குளம், பொம்மைவெளிக்குளம் எனப் பல குளங்கள் உள்ளன. ஆனால் இக்குளங்கள் நல்ல முறையில் சீரமைக்கப்பட்டு, மழை நீரைத் தேக்கி வைக்கக்கூடிய அளவுக்கு புனரமைக்கப்படவில்லை. கஸ்தூரியார் வீதிக்கும், ஸ்ரான்லி வீதிக்கும் இடையில் இருந்த குளம் ஒன்று கடைகள் கட்டுவதற்காக முன் யோசனையின்றி தூர்க்கப்பட்டுவிட்டது. 1960 — 70களில் இந்தக் குளத்தின் பெயரால் கஸ்தூரியார் வீதியில் 'லேக்வியூ உணவகம்' (Lakeview Hotel) என்ற பெயரில் பெயர்பெற்ற உணவு விடுதியென்றும் இருந்தது.

உண்மையில் மக்களின் ஒத்துழைப்புடன் வட மாகாணசபை இந்தக் குளங்களைப் புனரமைக்குமாக இருந்தால், பெருமளவு நல்ல நீரைத் தேக்கி வைக்க முடியும். அத்துடன் நாட்டில் மழை வீழ்ச்சியும் குறைவடைந்து செல்கின்றமைக்கான இன்னொரு காரணி காடுகள் அழிக்கப்பட்டமையாகும். குறிப்பாக 30 வருடப்போர் இடம்பெற்ற வடக்கு கிழக்கு மாகாணங்களில் போரில் ஈடுபட்ட இருதரப்பினராலும், கள்ள மர வியாபாரம் செய்பவர்களாலும் பெரும் தொகையான காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. இந்த மழைக்காடுகளால்தான் முன்னைய காலங்களில் போதிய மழை பெய்தது.

போர் தொடங்குவதற்கு முற்பட்ட காலங்களில் காடுகள் குடியேற்றம் போன்ற சில தேவைகளுக்காக அழிக்கப்பட்டாலும், அதற்குப் பதிலாக புதிய இடங்களில் காடுகளை அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் புதிதாக நடுகை செய்தது. அப்படி நடுகை செய்யும்போது, மழைக்காக மட்டுமின்றி, பயன்பாட்டுக்கான நல்ல மரங்களான தேக்கு, முதிரை, சமண்டலை, யாவரணை என்பன நடுகை செய்யப்பட்டன. இன்று அவை எதுவும் இல்லை. எனவே திரும்பவும் திட்டமிட்ட முறையில் காடுகளை வளர்ப்பது அவசியம். இவையெல்லாம் மத்திய அரசின் உதவியுடன் மாகாணசபையால் முன்னெடுக்கப்பட வேண்டிய விடயங்கள். எனவே, யாழ்ப்பாணக் குடாநாட்டின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பது என்பது மந்திரத்தால் மாங்காய் வீழ்த்தும் விடயமோ அல்லது கடவுளின் அருட்கொடையால் வரும் விடயமோ அல்ல. இந்த விடயத்தில் மாகாண சபை, மத்திய அரசாங்கம் என்பனவற்றின் கூட்டு முயற்சிகளும், நிபுணர்களின் ஒத்துழைப்பும், மக்களின் பங்களிப்பும் அவசியமானவை. பல வளர்முக நாடுகள் இந்த அடிப்படையில்தான் தமது நீர்ப் பிரச்சினையைத் தீர்த்துள்ளன. அந்த அனுபவங்களைவ வட மாகாணசபை படித்துப் பார்க்க வேண்டும்.

அரசியல் ஆதாயங்களுக்காக தீர்மானங்களை நிறைவேற்றி, மத்திய அரசாங்கத்துடன் மல்லுக்கட்டுவதை விட, வட பகுதி மக்களின் இந்த ஜீவாதாரமான பிரச்சினைக்கு முன்னுரிமை கொடுத்துச் செயல்படுவதற்கு வட மாகாண சபை முன்வர வேண்டும். *

---

பொருள்முதல்வாதம் தான் மார்க்சியத்தின் தத்துவஞானமாகும். பொருள்முதல்வாதம் ஒன்றுதான் முரணற்ற தத்துவஞானமாகும், இயற்கை விஞ்ஞானங்களுடைய எல்லாப் போதனைகளுக்கும் ஏற்புடையதாகும், மூட நம்பிக்கைகளுக்கும் பகட்டுக்கும் பசப்புக்கும் இன்ன பிறவற்றுக்கும் தீராப்பகையாகும்.

**- லெனின்**

# தோழியர் திருமதி நாகேஸ்வரி திருநாவுக்கரசு அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபமும் புரட்சிகர அஞ்சலியும்!



யாழ்ப்பாணம் சங்கானையைப் பிறப்பிடமாகவும், கனடாவில் வசித்து வந்தவருமான தோழியர் திருமதி நாகேஸ்வரி திருநாவுக்கரசு அவர்கள், 2016 மே 06ஆம் திகதி கனடாவில் காலமானார் என்ற செய்தியை அனைத்துத் தோழர்களுக்கும், மக்களுக்கும் மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தோழியர் நாகேஸ்வரி அவர்கள் தனது இளமைக் காலத்திலேயே மார்க்சிச இயக்கத்தின்பால் ஈடுபாடு கொண்டவராகத் திகழ்ந்தார். தோழர் வைத்திலிங்கம் திருநாவுக்கரசு (இலங்கைப் போக்குவரத்துச் சபை முன்னாள் பரிசோதகர்) அவர்களைத் திருமணம் செய்த பின்னர், இருவருமாக கம்யூனிஸ்ட் இயக்கத்தில் இணைந்து அர்ப்பணிப்பாகப் பணி புரிந்தனர்.

சாதனைகள் பல படைத்த சங்கானை மண்ணின் புதல்வர்களான இத்தம்பதியினர், அந்த மண்ணில் நடைபெற்ற தீண்டாமைக்கு எதிரான வீரமிக்க பல போராட்டங்களிலும், ஏனைய சமூக சமத்துவத்துக்கான போராட்டங்களிலும் தம்மை இணைத்துக்கொண்டு உறுதுணையாக நின்றனர்.

சங்கானைப் பட்டினசபையின் தலைவராக தோழியர் நாகேஸ்வரியின் ஒன்றுவிட்ட சகோதரரும், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவருமான தோழர் மான் முத்தையா அவர்கள் பணியாற்றிய காலத்தில், இத்தம்பதியினர் இருவரும் அவருக்கு உறுதுணையாக இருந்தனர்.

கனடாவிற்கு புலம்பெயர்ந்து வந்த பின்னரும், தோழர் திருநாவுக்கரசு அவர்களும், அவர் மனைவி தோழியர் நாகேஸ்வரி அவர்களும் இங்கு வாழ்கின்ற இலங்கை இடதுசாரித் தோழர்களுடன் இணைந்து செயற்பட்டனர். தலைமைத்துவப் பண்புமிக்க தோழியர் நாகேஸ்வரி, கனடியத் தமிழர்கள் மத்தியில் முற்போக்கு சிந்தனைகளை விதைத்துவரும் 'ஆக்கபூர்வ சிந்தனை செயற்பாட்டுக்கான மையம்' என்ற அமைப்பின் தலைவராகவும் பணி புரிந்தார்.

தோழியர் திருமதி நாகேஸ்வரி அவர்களின் மறைவையொட்டி அவரது கணவர், மகன், மருமகள், பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார் உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், தோழியர் நாகேஸ்வரி அவர்களுக்கு எமது செங்கொடியைத் தாழ்த்தி புரட்சிகர அஞ்சலியையும், வீர வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**இலங்கை இடதுசாரிகள் கூட்டமைப்பு – கனடா**

**leftlanka@gmail.com**

---

**முன்பக்கத்தொடர்ச்சி…**

மேற்கத்தைய சார்பு அரசாங்கம் மீண்டுமொரு புதிய அரசியல் அமைப்பை வரைவதைப் பற்றிப் பேசி வருகிறது. புதிய அரசியல் அமைப்பின் நோக்கம் இந்த அரசாங்கத்தைப் பதவிக்குக் கொண்டு வந்த மேற்கத்தைய சார்புச் சக்திகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதுதான் என்ற விமர்சனம் ஏற்கெனவே கிளம்பியுள்ள நிலைமை ஒருபுறமிருக்க, இந்த அரசியல் அமைப்பு என்ன உள்ளடக்கத்தைக் கொண்டு அமையப் போகிறது என்ற கேள்வியும் எழுந்து நிற்கிறது.

ஏனெனில், ஏற்கெனவே நடைமுறையில் உள்ள அரசியல் அமைப்பு சர்வாதிகாரத்தனமாக இருப்பதுடன், இனப் பிரச்சினையையும் சிக்கல்படுத்தி இருப்பதால், புதிய அரசியல் அமைப்பு இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமா என்ற அவா மக்கள் மத்தியில் எழுவது இயல்பானது.

எனவே, புதிய அரசியல் அமைப்பு முக்கியமாக இரண்டு விடயங்களுக்குத் தீர்வு காண்பதாக அமைய வேண்டும். ஒன்று, பூரணமான ஜனநாயக அரசியல் சூழலை புதிய அரசியல் அமைப்பு உருவாக்க வேண்டும். ஜனநாயகச் சூழல் எனும்போது, அரசியல் உரிமைகள், சம வாய்ப்பு, தனிமனித சுதந்திரம், சமூகப் பாதுகாப்பு, ஊடக சுதந்திரம், மனித உரிமைகள் பேணுதல், சுற்றச்சூழலைப் பாதுகாத்தல் எனப் பலவகைப்பட்டதாகும். இரண்டாவது, முன்னைய மூன்று அரசியல் அமைப்புகளாலும் தீர்க்கப்படாமல் புரையோடிப் போயிருக்கும் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாகும்.

ஆனால், 'யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே' என்பதைப் போல, தற்போதைய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் இந்த அரசாங்கம் கொண்டுவரப்போகும் புதிய அரசியல் அமைப்பின் வெள்ளோட்டமாக அமைந்திருக்கிறது.

அதாவது, பதிய அரசியல் அமைப்பிலும் நிறைவேற்ற ஜனாதிபதி முறைமை முற்றாக நீக்கப்பட மாட்டாது எனத் தெரிகிறது. தற்போதைய அரசியல்

அமைப்பில் உள்ள ஒரேயொரு நல்ல அம்சமான சிறுபான்மை இனங்களுக்கும், சிறிய கட்சிகளுக்கும் அனுகூலமான விகிதாசார முறை நீக்கப்படும் சாத்தியமும் உள்ளது. இதுதவிர, தற்போதைய அரசாங்கம் எதிர்க்கட்சியினரைப் பழிவாங்கும் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் செய்து வருகின்றது. அதுமாத்திரமின்றி, ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் முயற்சியிலும் அரசாங்கம் இறங்கியுள்ளது. இதுபோன்ற பல ஜனநாயக விரோத நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்து வருகின்றது.

இனப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலும், அரசாங்கமும் தமிழ் தலைமையும் சேர்ந்து குட்டையைக் குழப்பி வருகின்றன. இலங்கையை இரண்டாகப் பிரித்து, வடக்கு கிழக்குப் பகுதிக்கு சமஸ்டி வழங்க வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பால் நிர்வகிக்கப்படும் வட மாகாண சபை தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. அந்தத் தீர்மானத்தின் உள்ளடக்கத்தை அரசாங்கத்தை ஆதரித்துக் கொண்டு, எதிர்க்கட்சியாகவும் இருக்கும் கூட்டமைப்புத் தலைமையும் ஆதரித்துள்ளது. சமஸ்டி என்ற சொல்லால் கடந்த காலத்தில் இலங்கையில் எழுந்த பாரதூரமான அரசியல் கொந்தளிப்பு நிலைமையை அறிந்திருந்தும், மீண்டுமொரு திட்டமிட்ட குழப்ப விளையாட்டில் தமிழ் தலைமை ஈடுபட்டுள்ளதையே இது உணர்த்துகிறது.

இப்படிச் சமஸ்டி கோருபவர்கள், 2000ஆம் ஆண்டில் சந்திரிக குமாரதுங்க தலைமையிலான அப்போதைய அரசாங்கம் கொண்டு வந்த, ஏறக்குறைய சமஸ்டிக்கு ஒப்பான, வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் பேசும் பிரதேசங்களை உள்ளடக்கிய ‘பிராந்தியங்களின் ஒன்றியம்’ என்ற நல்லதொரு திட்டத்தை ஐ.தே.கவுடனும், ஏனைய சிங்கள இனவாதக் கட்சிகளுடனும் சேர்ந்து நிறைவேற்ற விடாது முறியடித்தது எதற்காக என்பதற்கு விளக்கம் சொல்ல வேண்டும். தமிழ் தலைமையின் அந்த நடவடிக்கையை வைத்துப் பார்க்கும்போது, இப்பொழுது சமஸ்டி என்று கூக்குரல் இடுவது, இனப் பிரச்சினையைத் தீரவிடாமல் குட்டையை குழப்பி அரசியல் இலாபம் பெறுவதற்கே என்பது தெட்டத் தெளிவானது.

மறுபக்கத்தில், தமிழ் தலைமையின் கோரிக்கைக்கு மறுத்தான் அடிப்பது போல, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மிகவும் தெட்டத்தெளிவாக, “சமஸ்டி என்ற பேச்சுக்கே இடமில்லை” என ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் வலியுறுத்திக் கூறியுள்ளார். அதேபோல, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இராணுவ வைபவம் ஒன்றில் உரையாற்றகையில், “இலங்கையில் ஒற்றையாட்சி முறை இருப்பதே, நாட்டின் ஐக்கியத்துக்கும் ஒருமைப்பாட்டுக்கும் அவசியமானது” எனக் குறிப்பிட்டுள்ளார்.

மறுபக்கத்தில், தென்னிலங்கையிலுள்ள ஏனைய அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரையில் கூட, இடதுசாரிக் கட்சிகளையும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பிரிவினரையும் தவிர, இனப் பிரச்சினைக்குத் தீர்வாக ஒற்றையாட்சியை நீக்கிய அதிகாரப் பகிர்வுக்கு ஏனைய கட்சிகள் ஆதரவளிக்கத் தயார் இல்லை.

எனவே இந்த நிலைமையில், அமையப்போகும் புதிய அரசியல் அமைப்பில் சமஸ்டி வகையிலான அரசியல் தீர்வுக்கு இடம் இல்லை என்பது தெட்டத் தெளிவானது. இருந்தும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சம்பந்தன் ~ சுமந்திரன் அணியினர் இந்த அரசாங்க காலத்தில், அதுவும் இந்த வருடத்தில் இனப் பிரச்சினைக்கு நியாயமானதொரு தீர்வு காணப்படும் எனத் திரும்பத் திரும்பக் கூறி வருகின்றனர் என்ன முகாந்திரத்தை வைத்து இவர்கள் இப்படிக் கூறி வருகின்றனர் என்பது ‘ஆண்டவனுக்குக் கூட’ தெரியுமோ என்னவோ?

இந்தச் சூழ்நிலையில், ஜனாதிபதியும், பிரதமரும் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதில் பற்றுறுதியுடன் இருப்பதாகவும், அவர்கள் மீது நம்பிக்கை வைக்க வேண்டும் என்றும், அரசாங்கத்தை ஆதரித்துக் கொண்டிருக்கும் தமிழ் தலைமைகள் சொல்லுவது, மீண்டுமொருமுறை தமிழ் பேசும் மக்களை நம்ப வைத்துக் கழுத்றுக்கும் செயலே அன்றி வேறு எதுவுமல்ல.

எனவே, இந்த அரசாங்கம் கொண்டுவரப்போகும் புதிய அரசியல் அமைப்பு என்பது, நாட்டில் ஜனநாயக ஆட்சிமுறையை நிலைநாட்டுவதற்கோ அல்லது தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வ காண்பதற்காகவோ அல்ல என்பது தெளிவானது. அவர்கள் புதியதொரு மேற்கத்தையப் பாணியிலான அரசியல் அமைப்பைக் கொண்டுவர இருப்பதன் நோக்கம், நாட்டின் அரசியல், பொருளாதார, நிர்வாக, நிதிக் கட்டமைப்பு முறைமையை அந்நிய மற்றும் பிராந்திய வல்லாதிக்க சக்திகளின் நலன்களைப் பாதுகாப்பதற்கே தவிர வேறெதற்குமல்ல.

இந்த விடயத்தில் தேவைக்கு அதிகமாக மாயை கொள்வது நமக்கு நாமே குழிதோண்டிக் கொள்வதாகத்தான் முடியும். அடிப்படை உண்மை என்னவெனில், நாட்டுக்கு எதிரான, அந்நிய சக்திகளுக்கு விசுவாசமான ஒரு அரசால், நமது நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு ஏற்ற அரசியல் அமைப்பை வரைய முடியாது என்பதே. இதை உணராமல், பல நல்லெண்ணம் கொண்டவர்கள் கூட, இந்த அரசியல் அமைப்பால் ஏதோ மந்திர தந்திரங்கள் நிகழப்போகிறது என நினைத்து, தமது நேரத்தை வீணாக்கி ஆலோசனைகளை முன்வைத்து வருகின்றனர். அவர்களுக்கு எஞ்சப்போவது ஏமாற்றமே தவிர வேறெதுவுமல்ல.

முதலில் செய்ய வேண்டியது, நாட்டில் உண்மையான மக்கள் நலன் காக்கும் அரசொன்றைப் பதவிக்குக் கொண்டு வருவதே. அதன் பின்னர் நாட்டு மக்கள் அனைவரதும் ஆலோசனைகளுடன் புதிய அரசியல் அமைப்பொன்றை வரைவதே சாலப் பொருத்தமாக இருக்கும். எங்களுக்குத் தேவை முற்றுமுழுதான ஜனநாயக ரீதியிலான புதிய அரசியலமைப்பே தவிர, புதிய வடிவத்தில் இன்னொரு 1978இன் அரசியல் அமைப்பல்ல. இதில் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

**“மக்கள், மக்கள் மட்டுமே வரலாற்றின் உந்து சக்தியாவர்”**

**– மாஓ**

'Vaanavil' is a registered member of the National Ethnic Press and Media Council of Canada
வானவில்

# இலங்கை தீப்பற்றி எரிகையில் நவீன நீரோ மன்னர்கள் வீணை வாசிக்கிறார்கள்!

"ரோம் நகரம் தீப்பற்றி எரியும்போது நீரோ மன்னன் பிடில் வாசித்தானாம்" என்றொரு பிரபலமான சொற்றொடர் உண்டு. இதன் அர்த்தம், சனங்கள் அல்லல்படும்போது ஆட்சியாளர்கள் கேளிக்கையில் இருந்தார்கள் என்பதாகும். இந்த உவமை இப்பொழுது இலங்கையின் 'நல்லாட்சி' ஆட்சியாளர்களுக்கும் கனகச்சிதமாகப் பொருந்தி வருகின்றது.

2015 ஜனவரி 08இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர், இலங்கை சகல வழிகளிலும் படுபதாளத்தை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது. மக்கள் விலைவாசி உயர்வாலும், வேலையில்லாத் திண்டாட்டத்தாலும், போர்க்கால வடுக்கள் ஆற்றப்படாமலும் துன்பத்தில் உழல்கிறார்கள். இந்த நிலைமையில் நல்லாட்சியின் பிரதமரும், அவரது மந்திரி பரிவாரங்களும் சொகுசு வாகனங்கள் இறக்குமதி செய்வதற்காக நாடாளுமன்றத்தில் குறைநிரப்புப் பிரேரணை சமர்ப்பிக்கிறார்கள். அந்தப் பிரேரணை எதிர்க்கட்சியினரால் தோற்கடிக்கப்பட்டபோதும், வாக்குகளை மாற்றிச் சொல்லி மோசடி செய்ய எத்தனிக்கிறார்கள்.

அரசாங்கத்தின் இத்தகைய மக்கள் விரோத, ஜனநாயக விரோத நடவடிக்கைகள் பற்றி நாம் எமது வாயால் சொல்வதைவிட, இந்த ஆட்சியைப் பதவிக்குக் கொண்டு வருவதில் வெளிநாட்டு ஏகாதிபத்திய சக்திகளுடனும், உள்நாட்டுப் பிற்போக்குச் சக்திகளுடனும் கூட்டுச் சேர்ந்து பங்களிப்புச் செய்த ஜே.வி.பி. கட்சியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க அண்மையில் நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய உரையின் சுருக்கத்தை இங்கு தருகின்றோம்.

"அரசாங்கம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த குறைநிரப்புப் பிரேரணையில் பிரதமருக்கு பிரபுக்கள் பாதுகாப்பு வாகனமொன்றைக் கொள்வனவு



செய்வதற்கு 600 இலட்சம் ரூபாவும், அமைச்சர் ஒருவரின் அமைச்சைப் புனரமைப்பதற்கு 600 இலட்சம் ரூபாவும், இரு அமைச்சர்களின் வீடுகளைப் புனரமைப்பதற்கு முறையே 42 மற்றும் 25 இலட்சம் ரூபாவும் ஒதுக்க நிதி கோரப்பட்டுள்ளது. இதுதவிர, அமைச்சர்கள் பலரின் வெளிநாட்டுப் பயணத்துக்காக நிதி ஒதுக்கவும் இந்தப் பிரேணை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. நாடு முகங்கொடுத்துள்ள நெருக்கடி நிலையில் இந்தப் பிரேரணை அங்கீகரிக்கக்கூடிய ஒன்றல்ல. அதனால் இதனை எதிர்க்கவும், இதற்காக வாக்கெடுப்புக் கோரவும் நாம் முடிவு செய்தோம்.

வாக்கெடுப்பின் இறுதியில் முடிவு வெளியிடப்பட்டது. அந்த முடிவு தவறானது என்பது அப்பட்டமாகத் தெரிந்த நிலையில் மீள வாக்குகளை எண்ணுமாறு நாம் கோரினோம். ஆனால் சபைக்குத் தலைமைதாங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் அதற்கு உடன்படவில்லை. இதன்படி ஆதரவாக 33 வாக்குகளும், எதிராக 31 வாக்குகளும் அளிக்கப்பட்டதாக அவர் அறிவித்தார்.

பின்னர் வாக்கெடுப்புத் தொடர்பான வீடியோ காட்சிகள் ஆராயப்பட்டது. நாடாளுமன்ற செயலாளர் நாயகமும் எம்முடன் இருந்தார். இதன்படி இரு தரப்புக்கும் தலா 31 வாக்குகள் அளிக்கப்பட்டது புலனாகியது. இந்தக் குறைநிரப்புப் பிரேரணை சபையில் நிறைவேற்றப்படவில்லை. நாடாளுமன்றத்தில் முன்னெடுக்கப்படும் மிக முக்கியமான வாக்கெடுப்புத் தொடர்பில் நம்பிக்கையீனம் ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்ற அமர்வுகள் ஆரம்பிக்கப்பட்டபோது சபை நடவடிக்கைகளை பலப்படுத்துவதாக ஜனாதிபதியும், பிரதமரும் உறுதியளித்திருந்தனர். ஆனால் நாடாளுமன்றம் குறித்த கொஞ்ச நஞ்சமான நம்பிக்கையும் இழக்கப்பட்டுள்ளது. தமக்குத் தேவையான ஒருவரை சபாபீடத்தில் அமரவைத்து, தமக்கு விரும்பியவாறு வாக்குகளை எண்ணுவது நாடாளுமன்ற சம்பிரதாயத்துக்கு உகந்ததல்ல. வாக்கு எண்ணும் நடவடிக்கைகள் மோசடியாக இடம்பெறும் என்று கருதி நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகள் தயாரிக்கப்படவில்லை. நிதிச் சட்டமூலமொன்று சரியான முறையில் நிறைவேற்றப்படாவிட்டால், நாடாளுமன்றத்தின் உயரிய தன்மைக்கும் களங்கம் ஏற்படும்."

**குறிப்பு: ஜே.வி.பி. தலைவரின் ஜனநாயகம் மீதான அதீத பற்றுதலும், அக்கறையும் கொண்ட உரையைக் கேட்க நல்லாத்தான் இருக்கிறது. ஆனால் இந்தப் 'புரட்சியாளர்கள்' வெள்ளம் வருவதற்கு முன்னதாக அல்லவா அணையைக் கட்டியிருக்க வேண்டும். மக்கள் விரோத ஆட்சியைப் பதவியில் உட்கார வைத்துவிட்டு இப்போது புலம்பிப் பயனென்ன?**

**- சந்துரு**